[illegible]

[illegible] 7 [illegible] 11

[illegible] 1934

JL
R673m211,N2
N34.7.11.
187101.

1301

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 7—No. 11.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௭ | பவ ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1934 ஸூ நவம்பர்மீ | இதழ் ௧௧ |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

மயிலாப்பூருக்கு அப்பர் தேவாரமுண்டா? ... ௫௨௧
சித்தாந்த முத்தி யாருக்கு? ... ... ௫௨௫
ஓர் ஐயம் ... ... ... ௫௨௮
திருநீற்றின் சிறப்பு! ... ... ... ௫௨௯
இயற்கை அன்னையின் இன்மதி கொளுத்து ... ௫௫௧
புகலிவேந்தர் புனிதமொழி ... ... ௫௫௪
சைவ சமய சாரம் ... ... ... ௫௬௧
ஞாயிறு வழிபாடு ... ... ... ௫௬௪
திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு ... ... ௫௬௮
திருவாசகம் உரையுடன் ... ௪௮௧-௪௯௬
சித்தாந்த சாத்திரம் உரையுடன் ... ௧௩௩-௧௪௪

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுகாரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1934 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் விஜயம்

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 27-8-1934ல் சென்னைமா நகருக்கு விஜயம் செய்து நமது சமாஜ விசேட மகாநாட்டையும், இராயப்பேட்டை ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபையின் முப்பதாம் ஆண்டு விழாவையும் மிகச்சிறப்பாகத் தலைமை தாங்கி நடத்திவைத்துச் சென்னையின் பல பகுதிகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்திய செய்தியைச் சென்ற இதழில் தெரிவித்தோம். அவ்விதழ் வெளிவந்த பிறகு சுவாமிகள் திருவல்லிக்கேணியில் பலசொற் பொழிவுகளும் சிந்தாதிரிப்பேட்டை, மாம்பலம் தியாகராய நகர், சைதாப்பேட்டை, எழும்பூர் முதலிய பலபகுதிகளில் பலசொற் பொழிவுகளும் நிகழ்த்தினார்கள். திருவாளர்கள் திவான்பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், வி. கோவிந்தராஜ முதலியார், மாணிக்க முதலியார், டி. வி. ஆதிசேஷமுதலியார் முதலிய பல நல்லன்பர்கள் சுவாமிகளைத் தத்தம் இல்லங்கட்கு அழைத்துச் சென்று உபசரித்துச் சொற்பொழிவுகள் செய்வித்துக் கொண்டாடினார்கள். 29 10-34 அன்று மாலையில் சென்னை வாசிகளிடம் பிரியாவிடை பெற்று மறுநாள் விடியற்காலையில் சுவாமிகள் புறப்பட்டு ஆலந்தூர் சென்று சொற்பொழிவு நிகழ்த்திப் பிறகு செங்கற்பட்டு, கருங்குழி, அச்சிறுபாக்கம், கிளியனூர், புதுச்சேரி முதலிய பல இடங்களில் சொற்பொழிவுகள்நடாத்தி ஸ்கந்தர்சஷ்டி உத்ஸவத்தைப் புலிசைமடத்தில் நடத்திவைக்கும் அவசர நிமித்தமாகச் சென்று திருப்பாதிரிப்புலியூர்த் திருமடத்தை 5 11 34 அன்று சுகமாய் அடைந்தார்கள். சுவாமிகள் சென்னைவாசிகள் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டபடியால், மீண்டும் தைமாதக் கடைசியில் சென்னைக்கு வருவதாக வாக்களித்துள்ளார்கள். திருவொற்றியூரிலும் திருமயிலாப்பூரிலும் நடைபெற விருக்கும் திருவிழாக்களில் சுவாமிகள் நாடோறும் சொற்பொழிவு நிகழ்த்தி நல்லறிவுச் சுடர் கொளுத்துவார்கள் என்று சென்னை வாசிகள் ஒரு முகமாக எதிர்நோக்குகின்றனர்.

---

## உயிரை உடன் நீத்த உத்தமி

கல்கத்தா நகரத்தில் 31-10-34 அன்று மூன்று மரணங்கள் மிகவும் அதிசயிக்கத்தக்க முறையில் நிகழ்ந்த செய்தி அஸோஸியேடட் பிரஸ் தந்தியாகச் சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் 1-11-1934ல் வெளியிடப்பட்டது.

இந்திய ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த பைசாபாத்தில் கவர்ன்மெண்டு ப்ளீடர் வேலைபார்த்த 58 வயதுள்ள மாதோப்ரசாத் ஆரோரா என்பவர் நிமோனியா சுரத்தினால் பீடிக்கப்பட்டு பிழைக்க முடியாது என்று கைவிடப்பட்ட நிலையிலிருந்தார். இந்நிலையைக் கண்டு சகியாத அவரது குமாரரும், லக்னோ காலேஜ் புரொபசரும், பாரிஸ்டரும், இருபத்தொன்பது வயதுடையவருமாகிய தார்க்கபிரசாத்

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

" ஆலமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "


| | | |
|---|---|---|
| மலர் ௭ | பவ ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1934ஆம் நவம்பர்மீ | இதழ் ௧௧ |


## மயிலாப்பூருக்கு அப்பர் தேவார முண்டா?

[பத்திராசிரியர்]

திருமயிலாப்பூருக்கு அப்பர் சுவாமிகள் வந்த செய்தி மிகத் தெளிவாகப் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் சுவாமிகள் தொண்டை நாட்டில் பல தலங்களைத் தரிசித்துத் திருவான்மியூரைத் தொழுது பாடி, "மருவாரும் மலர்ச்சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார்" என்று ௩௩௧-வது பாட்டு கூறுகின்றது. அடுத்த பாட்டு,

" .........திருமயிலை சங்கரனார் தாள்வணங்கி
உரைவளர் மாலைகள் அணிவித்து உழவாரப் படையாளி
திரைவளர் வேலைக்கரை போய்த் திருவொற்றியூர் சேர்ந்தார் "

எனக் கூறுவதிலிருந்து அப்பர் சுவாமிகள் திருமயிலையில் பதிகம் பாடினாரென்றும், அதன் பின்னரே திருவொற்றியூர் சேர்ந்தாரென்றும் அறியக் கிடக்கும்.

இதற்கு அப்பர் தேவாரத்திலேயே அகச்சான்றுண்டு. திருவொற்றியூரில் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய "வண்டோங்கு செங்கமல" என்ற திருத்தாண்டகப் பதிகத்து ஆறுவது திருப்பாசுரத்தில் "வடிவுடைய மங்கையும் தாமு மெல்லாம் வருவாரை எதிர் கண்டோம் மயிலாப் புள்ளே" என்று கூறுவது நோக்கத்தக்கது. சுவாமிகள் தரிசித்த காலத்தில் மயிலாப்பூரின் மாடவீதிகள் மிக்க அழகு வாய்ந்தனவா யிருந்தன. இவ்வழகு சுவாமிகள் நினைவில் வேரூன்றி யிருந்தது. சுவாமிகள் தில்லையம்பதியில் புக்க திருத்தாண்டகம் அருளிய காலத்தில் இவ்வழகை நினைவு கூர்ந்து "மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப் பிலுள்ளார்" என்று அழகாகக் கூறியது பெருமகிழ்ச்சியை விளைவிக்கிறது. சுவாமிகள் காலத்திருந்தவராகிய திருஞானசம்பந்தரும் இவ்வீதி யழகைப் பூம்பாவைப் பதிகத்துள் "மாமயிலை வண்மறுகில், மலிவிழாவீதி மடநல்லார் மாமயிலை" என்றும், சோலையழகைக் "கார்தருசோலைக் கபாலீச்சரம்," "கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்," "கானமர் சோலைக் கபாலீச்சரம்" என்றும் கூறியிருத்தல் காண்க. திருமங்கை யாழ்வாரும் "தேனமர் சோலை மாட மாமயிலை" என்றார்.

இனி, அப்பர் சுவாமிகள் திருமயிலாப்பூரில் பாடிய தேவாரம் யாதென்பதை ஆராய்வாம். செல்லரித்தவை போக இப்போதுள்ள பதிகங்களுள் திருமயிலாப்பூருக்கு அப்பர் தேவாரத்தில் பதிகம் குறிக்கப்படவில்லை. ஆறாந் திருமுறையில் 'திருக்கழுக்குன்றம்' என்ற தலைப்பின்கீழ் "மூவிலை வேல் கையானை" என்ற பாசுரமும் "பல்லோடு தலைசடைமேல்" என்ற பாசுரமும் உள்ளன. ஏனைய பாசுரங்கள் கிடைக்காமையால் "பல்லோடு" என்ற பாசுரத்தின் எண் ௨-௩-௪-௫-௬-௭-௮-௯-௰ என்று அச்சுப் பிரதிகளிலெல்லாம் குறிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பிலிருந்து



"பல்லோடு" என்ற பாசுரத்தின் எண் இன்னதென்று கூடத் திட்டமாகக் கூற இயலாது. இதற்கும் "மூவிலை வேல்" என்ற பாசுரத்துக்கும் இடையே பாசுரம் உண்டா இல்லையா, உண்டாயின் எத்தனை உண்டு என்ற கேள்விகட்கெல்லாம் பதில் கூற இயலாத நிலைமையில் இப்பதிகம் நிற்கிறது. இராவணன் குறிப்புப் பெரும்பாலும் அப்பர் பதிகங்களின் கடைசிப் பாட்டுக்களிலிருக்கும். அக்குறிப்புப் "பல்லோடு" என்ற பாசுரத்தில் இன்மையால் அது கடைசிப் பாட்டல்லவென்று ஊகிக்க இடமுண்டு. இவ்விரண்டு பாசுரங்கள் மட்டும் கிடைத்துள்ள இப்பதிகத்துக்கு முதற் பாட்டில் வரும் "காவலனைக் கழுக்குன்றமமர்ந்தான் தன்னை" என்ற கழுக்குன்றக் குறிப்பைக் கொண்டே இப்பதிகத்துக்குத் 'திருக்கழுக்குன்றம்' என்ற தலக் குறிப்பு ஏற்பட்டிருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது. இதன் பின்னர் வரும் பதிகங்களெல்லாம் தனிப் பதிகங்களே. கடைசி பதிகம் மட்டும் புகலூர் பதிகம். "மூவிலை வேல்" என்ற இப்பதிகத்தில் உள்ள பாடல்கள் இரண்டே. ஒன்று "மூவிலை வேல்" என்பது; மற்றொன்று "பல்லோடு தலை சடைமேல்" என்பது. இவற்றுள் முற் கூறியதில் மட்டும் கழுக்குன்றம் என்ற குறிப்புளது. "பல்லோடு" என்ற பாசுரத்தில் எத்தலமும் கூறப்படவில்லை.

திருக்கற்குடித்தாண்டகப் பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் "கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்ற மகுடம் வருகின்றது. திருக்கற்குடியில் சுவாமி பெயர் கற்பக நாதர். திருக்கஞ்சனூர்த் தாண்டகப் பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் "கஞ்சனூராண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே" என்ற மகுடம் வருகின்றது. கஞ்சனூரில் தேவியார் பெயர் கற்பக நாயகி. இவ்விரண்டு பதிகங்களையும் ஆதாரமாகக் கொண்டு

ஆராய்ந்தால் சுவாமி பெயர், தேவியார் பெயர் கற்பகம் என்றுள்ள விடத்துக் கற்பகத்தைக் கண்ணாரக் காணும் குறிப்பு சுவாமிகள் பதிகத்தில் மகுடமாக விளங்குகின்றது. திருப்பூவனூர் என்ற தலத்தில் தேவியார் பெயர் கற்பகவல்லியாயினும் அவ்வூர்ப் பதிகம் ஐந்தாம் திருமுறையில் குறுந்தொகையா யிருத்தலானும், அத்திருமுறையில் இம்மகுடம் யாண்டும் கூறப்படாமையானும் அப்பதிகத்தில் இம்மகுடம் வந்திலது. திருவலஞ்சுழி என்ற தலத்துச் சுவாமி பெயர் கற்பகநாதேஸ்வரர். திருவலஞ்சுழிக்கும் திருக்கொட்டையூர்க் கோடீச்சரத்துக்கும் சேர்ந்து ஒரு பதிகம் ஆறுந்திருமுறையிலுள்ளது. இதில் இம்மகுடமில்லை. திருவலஞ்சுழிக்கு மட்டும் ஒரே பாசுரமுள்ள பதிகம் ஒன்று ஆறுந்திருமுறையிலுண்டு. அதில் நின்றியூரும் நெடுங்களமும் கூறப்படுகின்றன. அதிலும் இம்மகுடமில்லை. மேற்கூறிய தலங்களும் திருமயிலையும் தவிர (திருமயிலாப்பூரில் சுவாமி பெயர் கபாலீசுவரர், தேவியார்பெயர் கற்பகவல்லி) வேறு அப்பர் சுவாமிகள் பாடிய தலங்கள் எவற்றிலும் சுவாமி பெயராவது தேவியார் பெயராவது கற்பகம் என்றில்லை. திருக்கழுக்குன்றத்திலும் சுவாமி பெயராவது தேவியார் பெயராவது 'கற்பகம்' என்பதல்ல.

ஒரு தலத்துப் பதிகத்தில் பிற தலங்களைக் கூறுவது சுவாமிகள் வழக்கம் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள்ளன. கடைசியாக எழுந்த "எண்ணுகேன்" என்ற திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் வெண்காடு, மீயச்சூர், திருவாரூர், மாகாளம், வலஞ்சுழி, மறைக்காடு, கானப்பேர், கழுக்குன்றம் ஆகிய எட்டுதலங்கள் கூறப்படுகின்றன. இவ்வாறே வேறுபல தாண்டகங்களிலும் உள்ளன. தலம் குறிக்கப்படாத தனிப்பதிகங்களிலும் பலதலக் குறிப்புகள் வந்துள்ளன. திருவங்கமாலையில் கோகர்ணமும் குற்றாலமும்



கூறப்படுகின்றன. "ஆமயந்தீர்த் தடியேனை" என்ற தனித் திருத்தாண்டகத்தில் திருவதிகை, தில்லை, குடமூக்கு, இடைமருது முதலியதலங்கள் கூறப்படுகின்றன. எனவே, ஒரு பாசுரத்தில் ஒரு தலம் கூறப்படுவதிலிருந்து பதிகத்துக்குத் தலம் குறித்தல் ஒழுங்காகாது.

"பல்லோடுதலை சடைமேல்" என்றபாசுரத்தின் இறுதியடியாகிய "கல்லாடை புனைந்தருளும் காபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்ற மகுடம் கஞ்சனூர்ப் பதிகத்துள்ள "கஞ்சனூ ராண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே" என்ற மகுடத்தோடு ஒப்பிடற்பாலது. அவ்வாறு ஒப்பிட்டுக் கொள்ளின் அப்பனையும் அம்மையையும் கூறும் அழகு இம்மகுடத்துளதாகும். திருவொற்றியூரில் சுவாமிகள் "வடிவுடைய மங்கையும் தாமும் எல்லாம் வருவாரை எதிர் கண்டோம் மயிலாப்புள்ளே" என்று கூறியதன் உண்மையும் துலங்கும். திருமயிலையிலுள்ள கபாலியையும் கற்பகத்தையும் கண்ணாரக் கண்டு இப்பாசுரம் ஓதப்பெற்றது எனக்கூறுவதில் இழுக்கென்னை?

அப்பர் சுவாமிகள் காலத்தில் கபாலீச்சரம் கடற்கரையோரத்திலிருந்தது. கடல் ஊருக்குள் பெருகி வரவே, மூந்நூறாண்டுகட்கு முன் அக்கோயிலிலிருந்த மூர்த்திகளை எடுத்து இப்போதுள்ள இடத்தில் பிரதிஷ்டைசெய்து கடற்கரையில் கோயில் இருந்தபடியாகவே புதுவதாகக் கோயிலெடுத்தார்கள். சுவாமி சந்நிதி மேற்கு முகமாகவும் தேவியார் சந்நிதி சுவாமி சந்நிதிக்கெதிரே தெற்கு முகமாகவும் உள்ளன. சுவாமி சந்நிதியில் மகாமண்டபத்தில் வடக்கு முகமாக நின்று தரிசித்தால் இற்றைக்கும் 'கபாலியைக்கற்பத்தைக் கண்ணாரக்' காணலாம். இவ்வாறு இரண்டு சந்நிதிகட்கும் இடைநின்று ஒரே காலத்தில் கபாலியையும் கற்பகத்

தையும் கண்ணாரக் கண்டதையே அப்பர் சுவாமிகள் திருவொற்றியூர்ப் பதிகத்தில் "வடிவுடைய மங்கையும் தாமும்எல்லாம் வருவாரை எதிர்கண்டோம் மயிலாப்புள்ளே" எனக் கூறுகின்றாரெனத் தோன்றுகிறது. ஈண்டு 'எதிர்கண்டோம்' என்பது நோக்கத்தக்கது. பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்தால் "மூவிலைவேல் கையானை, பல்லோடு தலை சடைமேல்" என்ற இருபாசுரங்களடங்கிய பதிகத்தின் தலக்குறிப்பு முதலிய விவரங்கள்தெளிவுபடக்கூடும். ஏட்டுப் பிரதிகளையுடைய பெரியார்கள் ஏடுகளை ஒப்புநோக்கி மேற்கூறிய பொருள்களை ஆராய்ந்து தங்கள் முடிபுகளைத் தெரிவிக்க வேண்டுகிறோம். மேற்கூறியவைகளை ஆராய்ச்சிக்குரிய ஐயப்பொருள்களாகக் கொள்ளவேண்டுமே தவிர ஆராய்ச்சியிற் கண்ட முடிபுகளாகக் கொள்ளுதல் கூடாது.

# சித்தாந்த முத்தி யாருக்கு?

[ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்]

சைவ சித்தாந்த நெறியை உள்ளவாறு அனுட்டித்தொழுகுதற்கு ஏற்றதவமுடையராய்ச் சைவ மரபிற் பிறந்துள்ள உத்தமர் இந்நெறியே பற்றி யொழுகற்பாலர். முத்தியடைதற்குச் சாதனமான வழி ஞானம். அந்த ஞானம் குருவின் உபதேசத்தால் வரவேண்டும். குருவுபதேசம் பக்குவர்க்கே யுண்டு. பக்குவமாவது இருவினை யொப்புஞ் சத்திநிபாதமு மெய்திய சமயம். அநேக பிறவிகளில் செய்த சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே இருவினை யொப்புண்டாம். "மூர்த்திதலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு, வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" யென்றார் தாயுமானவர்.



"சித்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக்கண் சேர்த்திச் செனனமொன்றிலே சீவன் முத்தராக, வைத்தாண்டு மலங் கழுவி ஞானவாரி மடுத்து ஆநந்தம் பொழிந்து வரும் பிறப்பை யறுத்து, முத்தாந்தப் பாதமலர்க் கீழ் வைப்பனென்று மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்கராகிப், பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவரிது வென்ன பிராந்தி" எனச் சிவஞானசித்தி சொல்கின்றது. திருவாசகத்தைப்போல இங்குஞ் சித்தாந்த முத்திநெறியறியாத உலகர் "மூர்க்க" ரென்றே சொல்லப்பட்டிருக்கிறார்.

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே."

முத்திநெறி இதுவேயாமென்று பல சமயங்களுந் தத்தங் கொள்கைகளைச் சொல்லுவவாயினும் அவை உள்ளவாறு முத்திநெறியை யறிந்து சொல்லுவனவல்ல. அந்தச் சமயங்கள் பந்தத்துக் கிடமாகிய நிலைகளையே 'முத்தி'யென்றும், அவற்றை அடைவிக்கும் நெறிகளையே 'முத்திநெறி' யென்றும் சாதித்துப் போதிக்கின்றன. அவையெல்லாம் முத்திநெறி யறியாத மூர்க்கர்களது நெறிகளாம்.

மல நீக்கமும் சிவப்பேறுமாகிய இந்த இரண்டுமே பயனுமென்பது தோன்றவே, "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட" என்றார் மாணிக்கவாசகசுவாமிகளும். ஆதலால் இந்நிலையின் மிக்கதொரு முத்திநிலை வேறில்லை. இதுவே முடிவாகிய உண்மை முத்தியாம். இந்த நிலையை அடைதற்கேற்ற மெய்ந்நெறி சிவஞான நெறியேயாம். அந்த நெறி சைவசித்தாந்த சாத்திரங்களிலேயே கிடக்கின்றது.

ஆதலால், அறிவுந்தவமுமுடைய அன்பர்கள் சைவசித்தாந்த ஞானநூல்களை முறைப்படி குருமுகமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடி முத்திபெற முயல்வது கடனாம். சைவமரபிற் பிறந்தும் வாளாவொழிதல் அறிவன்று. முத்தி நெறி யறிந்து அந்நெறி யொழுகுதலே விவேகமாம்.

## ஓர் ஐயம்

[கோவைக் கிழார்]

திருத்தொண்டர் புராணம், கணநாத நாயனார் புராணத்தில் 3-ம் திருப்பாடலில், "எல்லையில் விளக்கெரிப்பவர் திருமுறை எழுதுவோர் வாசிப்போர்" என்று திருப்பணியாளர்களின் பெயர்கள் குறிக்கப் பெற்றிருக்கின்றன. ஆகவே கணநாதர் காலத்தில் திருமுறை எழுதுவதும் வாசிப்பதும் வழக்கமாக இருந்ததெனலாம். கணநாதர் திருஞான சம்பந்தரை வழிபட்டவர் என 5-வது திருப்பாடலில் காண்கிறோம். ஆகவே அக்காலத்தில் எழுதி வாசிக்கப் பெற்ற திருமுறை யாது? பிற் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட திருமுறையாக இராதல்லவா? 'திருமுறை' என்ற பெயர் நம்பிகள் காலத்திற்கு முந்தியே வழக்கத்தில் இருந்ததா?

## திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேஸ்வரபிள்ளை, வேளாங்கண்ணி]

(மலர் எ. இதழ் அ. உசஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

திருநீறு ஆன்மாக்களின் சகச மலத்தையே நீக்கும் இயல்புடையமையின் சரீரசம்பந்த நோய் முதலியன நீக்கல் அருமையாகுமோ? எங்ஙனம் எனின்:—சைவந்தழைத்தோங்கத் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரின்கண் திருவவதாரங் கொண்ட மருணீக்கியார் என்னும் திருநாவுக்கரசர் தாம் சமண மதத்தில் தொண்டு செய்தமையான் சூலை என்னும் ஒரு பெரும் நோய் இன்னவரைப் பற்றுணிற்க அவ்வியாதி அனந்தம் சமண மந்திராதிகளால் ஒட்டப்பட முயன்றும் எட்டுணையேனும் விட்டிலது கண்டு, மிடியுண்டு தமது தமக்கை திலதவதியார் திருவீரட்டானேசுரரிடம் அன்புரிமை பூண்டதறிந்து அவண் போதலும் திலதவதியார் 'நோயென்னும் பேயோட்டுவது தாயன்ன திருநீறே!' என்றோர்ந்தவராதலின் தருமசேனருக்குப் பெருமை மிகும் திருநீற்றை யள்ளி யீந்தருள அன்னவர் சூலை நோய் சூழா நோயாகலும், திருவெண்ணீற்றால் ஞானமெய்தி ஞாலம் போற்றும் நம் பணிப் பாமாலையால் புனைந்தனர். எனவே,

" ஸ்ரீகரம் பவுத்ரஞ்ச ரோக சோகநி வாரணம்
லோகே வசீகரம் புண்யம், பஸ்மம்
திரிலோக சாதனம்."

எனக் கூறலானும்,

" எண்டிசைகள் கீழுலக மேலுலக மெங்கு
மண்டு மறையன்றி வழங்குமவ் வேத

முண்டுதிரு நீறஃதுயிர்க் குறுமுத்தி
விண்டுகமாதி தரும் வேறவை பொய்யென்னும்.''

என வழங்கலானும்: அஃதாவது எட்டுத் திக்குகளும் மேலே ழும் கீழேழுமாகிய பதினான்கு உலகங்களும் மற்றப் புவனங் களுமாகிய எவற்றினும் பரப்பிரமாணமாய் மிளிர்வன மறை களே யன்றி மற்றையவன்று. அவ்வேதங்களினும் விபூதி யனுதியாயுள்ளது. உயிர்க்குறுதியாம் முத்திப்பேற்றையும் திருமாலுலகமாதிய பதவிகளையும் அளிக்கும் அளியுடைத் தாயது. விபூதி யொன்றே மூவுலக சாதனமாம் எனக் கூறத் தக்கது. மகாப்புனிதந் தங்கும் திருநீற்றைச் சற்றும் மதி யாது எவ்வளவு தானம் தவஞ் செய்யினும் அவை சித்தி யாகாவென்பது சத்தியம்.

வைஷ்ணவக் கொள்கையுள்ள ஸ்ரீ வில்லிப்புத்தூராழ் வாரும் அருச்சுனன் சிவசின்னங்கள் பூண்டே தவஞ் செய் தனன் என்பதை விளக்க,

“ஆசினன் மறைப்படியு மெண்ணில் கோடியாக மத்தின்
படியு மெழுத்தைந்துங் கூறிப்
பூசினன் வடிவமெல் லாம்விபூதி யால்அப் பூதிதனைப்
புரிந்தசடைப் புறத்தே சேர்த்தான்
றேசி லானப்பொருப் பின்சிகா மேவுஞ்சிவ
னிவனே போலு மெனத்தேவ ரெல்லாம்
பேசினார் வரிசிலைக்கை விசயன் பூண்ட
பெருந்தவத் தினிலைசி லர்க்குப்பேச லாமோ.''

என்பதானு முணரலாகும். எனவே, சாதனங்களுள்ளே இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றையும் எளிதிலளிக்கும் முற்படுசாதனமாயுள்ளது திருநீறேயன்றோ! ஐசுவரியமா கிய நம் வெண்பூதியினாலே திருத்தமாகிய திரிபுண்டரந்தரிக் காது வேறொன்றைத் தரித்துப் பேரின்பமுத்திதனை விழையு மொருவன் தான் நித்ததேகம் பெறவேண்டி அமிர்தசஞ்



சீவியினை யருந்தாது ஆலத்தை அயின்றதை யொக்கும் எனப் பொருளடங்கிய

“சீராம் வெண்ணீற்றுத் திரிபுண்ட ரம்விடுத்தே
பேரான முத்திபெற விரும்பல்—ஆரமிர்த
சஞ்சீவி யைவிடுத்தே சாகாதிருப் பதற்கு
நஞ்சே யுட் கொண்டது போலுமே.''

எனவரும் நீதி வெண்பாவானு முணரலாகும்.

இன்னும் விறகினால் ஆகமப்படி விளைவித்த திருவெண் ணீறும் சிவாலய மடைப்பள்ளிகளில் விளையும் திருநீறும் அன்னிய சாதியோர்கட்கு மாகும். ஸ்ரீ சிவபெருமானின் அருணத் திருமேனியிற் பூத்திருப்பது அனாதியான விபூதி. பின்னர் தேவர்கள் முதலாய சராசரங்களனைத்தும் தகித்துத் திருமேனியிற் றரித்தருளியது ஆதிவிபூதி. நாம் இப்போதும் கண்கூடாகப் பார்க்கும் நெருப்பின்கண் நீறுபூத்திருத்தல் சிவபெருமானையே குறிக்கும்.

(தொடரும்)

# இயற்கை அன்னையின் இன்மதி கொழுந்து

[அ. மு. பரமசிவாநந்தம்]

**நிலைமண்டல ஆசிரியப்பா**

**பா**லா றென்னும் பாக்கிய நதியில்
சாலவே மாலைத் தனிஅமர்ந் திருந்தேன்
ஆங்கே
இயற்கை அன்னையின் இன்மதி கொழுந்து
எனக்குவந் தடுத்தது என்னென இசைப்பேன்

செங்கதி ரண்ணல் தன்கதி ரடக்கி
எங்கும் இருள எழுகடல் அடைந்தான்
அக்கா லத்தின் அந்திப் பொழுது
மிக்கவே இன்பம் விளைத்தெனக் கீந்தது
மானிட வாழ்க்கை மாயமென் பதனைக்
காணவே அறியக் கண்ணிமைப் பொழுதில்
மேலைப் பக்கம் மின்னலும் இடியும்
சாலவே கொண்டு சாய்ந்தன முகில்கள்
உலகம் உண்ணும் ஓர்தனி ஊழி
கலகம் விளைக்கக் கருகிடல் போன்று
அச்சமும் பயமும் ஒருங்கே அளித்து
உச்சியை ஒட்டி ஓங்கி வளர்ந்தது
கீழ்த்திசைத் தன்மையை கிளர்த்தலும் நன்று
சாந்தங் கொண்ட தவசிதான் எனவே
எந்தோர் மருவும் இல்லா தமைந்தது.
இத்தகை இயற்கை என்னுடை மனக்கு
நற்பய னளிக்கும் நன்மதி ஈந்தது
மேலைப் பக்கல் நோக்குவோ மாயின்
கொலைமுதல் தீத்தொழில் கொண்டோன் மனது
கவலையி னாலும் கபடத் தாலும்
அலைவது போன்று அமைந்தது மேகம்
இருளுடை மனம்போல் இருண்டது ஆங்கண்
அவனுடை மனது அழிந்து முடங்கல்போல்
பலமுடை யிடியும் பயனளித் ததுவே
குணபால்,
தீமை யென்பதைச் சிறிதும் அறியா
தூய்மை யுள்ளம் துலங்கி நின்றது
காண்போர் யாரும் காமுறு வண்ணம்



தீஞ்சுவை ஈந்த திறமென் னிசைப்பேம்!
எனினும்,
கண்ணிமைப் பொழுதே கருங்கொண் டலுமே
நண்ணியெம் மருங்கிலும் நாட்டமுற் றமைந்தது
தூய்மை மறந்தது துன்பம் தொடர்ந்தது
சேய்மையை விட்டுச் சிறியனில் சென்றனன்
இத்தகை யியற்கை இவ்வுல கியல்பைத்
தெற்றென விளக்குந் தேற்றம் என்னே!
நல்லவர் தீயவர் நானில மதனில்
மல்கியே இருவரும் மருங்குறை கின்றனர்
தீயவர் மனதோ தீமை பறப்பது
நல்லவர் மனதோ நன்மை பயப்பது
கீழ்த்திசை விரும்பல்போல் கேள்வியோர் உதவியை
வாழ்த்தியே நாடுதல் வளமுறற் கழகு
மற்றும்,
தீயவர் சேர்ந்தால் திறத்தகு நலத்தோர்
மாயம தாகி மாணழி படுவர்
ஆதலால் நாமும் ஆணவ முள்ள
தீயவர் கண்ணில் தென்படா தோடி
இயற்கையை ஈந்த இறைவன தடிகளை
மயக்கம தறுக்க வழுத்திடல் புரிவோம்.

# புகலிவேந்தர் புனிதமொழி

[ஈ. த. இராஜேசுவரி அம்மாள், எம். ஏ., எல். டி.]

(மலர் ௭. இதழ் ௧௦. ௫௨௦-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி யுக்தி முறையில் திருஞான சம்பந்தர் மொழி புனிதமாமென்று ஆராய்வோம். எப்பாடையிலும் பெரும்பாலும் இயலில் ஏற்றம் பெற்ற நூல் இசையில் ஏற்றம் பெறுவதில்லை. அவ்வாறே இசையில் பெற்றது இயலில் பெறுவதில்லை. நமது பாஷையிலும் சமய குரவர்களுக்குப் பின்னர் இசை, இயல், நாடகம் வெவ்வேருகப் பிரிந்தன. இந்நூற்ருண்டுஇயற்றமிழில் இசைஇருப்பது ஏகதேசம். அவ்வாறே தமிழில் இசையும் இலக்கிய ஒளிபெறுவதில்லை. நாடகமேடைகளில் நடிக்கும் தற்கால நாடகங்களைப் பற்றி நாம் சொல்லவேண்டியதே யில்லை. தமிழ் பாஷையின் பாவமே வடிவாய் அவைகள் திகழ்கின்றன. சம்பந்தர் பாடலோ தமிழ் இயலில் உருக்கிவிட்ட செம்பொன் போலும், கற்கண்டு திரண்ட வாசனைப் பாகுபோலும் நிதானித்து நோக்குமளவில் அளவற்ற இன்பம் தருகின்றது. அவ்வாறு தருவதற்குக் காரணம் யாதென்று ஆராய்வோமாயின் சீகாழி வேந்தர் "சொல்லும்" அவற்றின் "ஒழுங்கு"மேயாம். (The Words and their methods of expression) அவர் சொற்கள்யாவும் குடமுனிக்கையில் அடங்கும் கடல்போல் ஒளிக்கும். சம்பந்தர் செய்யுளின் மேன்மை (i) அச்சொற்றொடர்களைப் பின்னும் சுருக்க முடியாத தன்மை யாகும் (ii) அச்சொற்றொடர்களும் ஆற்றொழுக்கு போல் ஓடுவன கொண்டு கூட்டி பொருள் செய்ய வேண்டும் கஷ்டம் கற்போருக்கு அங்கு நேர்வதில்லை (iii) வடமொழிச் சொற்கள் ஒன்றும் இல்லையென்பதே அவர் உறுதிமொழி. சம்பந்தர் வடமொழியிலும்,



தமிழ் மொழியிலும் மிக்க வல்லவராதலால் "ஞானசம்பந்தன தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே" யென்று விளக்கும் திருவண்ணாமலைப் பாசுரத்தால் வடசொற்களும் திசைச் சொற்களும் கலப்பில்லாத தமிழ் என்றே நாம்கொள்ளல் வேண்டும். ஆயினும் வடமொழியிலுள்ள சிலசொற்களை "தற்பவம்," "தற்சமம்," என்னும் முறையில் கொள்ளப்பட்டதென சில புலவர் கூறுவார். ஆயினும் சம்பந்தர் பொய்ம்மொழி புகலாத பரிசுத்தராதலாலும் அவர் கருத்து அக்காலத்தில் வழங்கிய தமிழ் மொழியிலேயே கூறவேண்டுமென்னும் திரு உள்ளம் அவருக்கிருந்தாலும் வடசொற்களையும் திசைச் சொற்களையும், அவர் கண்டறிந்து நீக்கத் தக்க கல்வி ஞானம் பெற்றவராதலாலும், அவர் தமிழ் சுத்த தமிழ் என்பதற்கு யாதொரு தடையுமில்லை. அவ்வாறு (iv) சுத்தச் சேந்தமிழ்ச் சோற்களால் பாடிய பதிகங்கள் இசையில் தமிழ்ப் பண்களின் நுட்பங்களை வெளியாக்கும் வன்மை பெற்றிருக்கின்றன.

"வீழிம் மிழலைம் மேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர் கலைஞான சம்பந்தன் தமிழ் பத்தும்
யாழின் இசைவல்லார் சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின் மலிவினை போயிட வுயர்வா னடைவாரே"

என யாழில் பாடக்கூடிய யாவும் இவர் பதிகத்தில் கேட்டு அநுபவிக்கலாம். (v) தமிழ்மோழிச் சுத்தம் மாத்திர மன்று அம்மோழியைத் தேர்ந்தெடுத்த கலையே சம்பந்தர் பதிகத்தில் விளங்கும் ஒருவகையொளியாம். சம்பந்தர் பதிகம் முற்றும், சிலேடையாகப் பாடிய சித்திரக் கவிகள் நீங்கலாக, மற்றைய பதிகங்கள் ஒவ்வொன்றிலும் (vi) ஒரு மோழி ஒருபோருளையே தரும்படிப் பாடியிருக்கின்ருர். ஏனெனில் பிற்காலத்தில் வருபவர் பொருள் இதுவோ அதுவோ யென்று மயங்கலாகாதென்பதே அவர் திருவுள்ளம். ஆகையால் அக்காலத்தில் வழங்

கிய சீகாழி இயற்சொற்களே, சம்பந்தர் திருமுறைகளில் முற்றும் இருப்பனவென்று கூறினும் அமையும். ஆயினும் இக்காலத்தில் நாம் அவர் திருமுறைகளைப் படிப்போமாயின் நமக்கு ஒருமொழி பல பொருள்களைக் கொடுக்கின்றது. இவற்றுள் எந்த பொருள் ஆளுடையபிள்ளையார் எண்ணிய பொருளென்று தீர்மானிக்க சில பரீட்சைகள் உள.

பிள்ளையார் எண்ணிய பொருளுக்கும் வேறு பொருளுக்கும் பேதம் எவ்வாறு உண்டாகுமெனின் அவர் கருதிய பொருள் உரைத்தாலன்றி செய்யுளிலுள்ள விஷயங்களுக்கு தருக்க ஒழுங்கு பொருந்தாது, செய்யுள் முற்றும் அவையவ ஒழுங்கு (Unity of Thought-artistic whole) கெட்டு வெற்றுரைச் சொற்களாய் முற்றும் திகழும். அவர் கருதாத பொருளை நுழைப் போமாயின் முதலடி விஷயத்திற்கும் இரண்டாவதடி விஷயத்திற்கும் சம்பந்தம் ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் நயமிராது. நயமிருந்தாலும் தருக்க ஒழுங்கு அமையாது. தருக்க ஒழுங்கு பெற்றாலும் இனிமை தராது. ஆதலால் சொற்றொடர்ச் சம்பந்தம், நயம், தருக்க ஒழுங்கு, இனிமை, கலையின் செம்மை இவற்றில் எதையாகிலும் நாம் கொடுக்கும் பொருள் கெடுக்குமாயின் அதை நாம் சம்பந்தர் கருதிய பொருள் அன்றென்று நீக்க வேண்டும்.

சம்பந்தர் பாடிய பதிகங்கள் யாவும் (vii) ஆசுகவி (Offhand Inspired Poetry) என்பது திண்ணம். முன்னால் கருதிவந்து பாடவேண்டுமென்று பாடிய பாடல்களல்ல. பரமன் கோயில் முன் நின்றதும் அவர் திருஉள்ளமானது அக்கோயிலையும் அதைச்சுற்றியுள்ள பொருள்களையும் புகைப்படம் எடுத்தாற்போல் ஓர் ஓவியம் அவர் மனதில் திரள்வதை வெளியிடுவார். அவ்வோவியத்திற்கு உதாரணம் தற்கால நாடக மேடைகளில் ஓவியம் நடிப்பதுபோலும்



பேசுவதுபோலும் (Talkies) முறைமுறையே அத்தோற்றத்தின் பாகங்கள் ஒன்றின்பின் ஒன்று ஒழுங்காய் வருவது காணலாம். ஆயினும் அவ்வோவியம் காணவேண்டியவற்றையே காட்டும். காட்டுவதும் அற்புத நூதன ஒளிகள் வெளிவிடும் பண்டங்கள்போல் தாக்கும் பொருளையெல்லாம் செம்பை வேதித்துப் பொன்னாக்குவதுபோலும், கன்மனதை நன்மனமாகவும்கரையவைக்கும். இவர் பதிகங்களின் அமைப்பு என் தந்தையார் சித்தாந்தத்தில் வெளியிட்டுவரும் "திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் காணலாம். அவர் கூறுவதை நான் மறுபடியும் கூறுவது வெற்றுரையாகும் ஆகையால் அவற்றை நான் இங்கு கூறப்போவதில்லை.

திருஞானசம்பந்தர் பதிகத்தில் (viii) ஒரு சொல்லும் வெற்றுரையன்று. (Unnecessary tackling of words) அவர் செய்யுட்களுக்கு யாரேனும் உரைகூறும்போது அதிலுள்ள சொற்றொடர்கள் வெற்றெனத் தொடுத்தல் போல் உரை செப்புவராயின் அது அகராதிக்குப் பொருந்தியிருப்பினும் பிள்ளையார் திருவுளம் அன்றென திண்ணமாய் எண்ணுவீராக. பத்தழகு ஒரு நூலுக்கு அவசியமிருக்க வேண்டுமென்று கூறிய பவணந்தி நன்னூலிலும் கூறியது கூறல் முதலியன நேர்கின்றன. சம்பந்தரில் ஒரு விஷயத்தையே பல தடவைகளில் செப்ப நேரினும் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையிலுள்ள பேதம்போல் ஒற்றுமையில் வேற்றுமை காணப்படும். அதாவது ஒரு பதிகத்தில் மாத்திரமன்று. ஒரு ஸ்தலத்தில் பாடிய விஷயத்தையே மற்றொரு ஸ்தலத்தில் சம்பந்தர் பாடுவதுமாம். திருஞானசம்பந்தர் பதிகங்களை நாம் ஆராய்ந்து நோக்குங்கால், அவை ஒவ்வொரு உயிருள்ள வடிவமாகக் (Living Organisms) காணப்படும். ஆதலால் பதிகத்துக்கேற்ற

குணம் வேற்றுமைப்படுவதைத் திருக்கடைக்காப்பினின்று நாம் உணரலாம்.

இனி திருஞானசம்பந்தர் பதிகத்தில் அவர் புனிதமொழி பிரத்தியட்ச அனுபவத்தில் எப்பலனைக் கொடுக்கிறதென்று ஆராய்வோம். முற்காலத்தில் பாண்டியன் வெப்பு நோயும், அடியார்கள் விஷஜுரமும் தீர்த்ததுபோல் இக்காலத்திலும் பலருக்குச் சில பதிகங்களால் தீராநோய்கள் தீர்ந்தனவென்று பல திக்குகளினின்றும் ஒவ்வொரு காலத்தில் அற்புதங்களைக் கேட்கின்றோம். நம்பிக்கையற்ற இக்காலத்தில் அவற்றைக் கட்டுக்கதையென்பார்கள். ஆயினும் நல்லிசையால் நோய்கள் தீர்க்கக்கூடுமென்பது வைத்திய சாஸ்திரிகள் ஆமோதிக்கும் விஷயமாம். ஒரு இசைக்கருவியைத் தொட்டதும் தொடாததுமாய் ஒரு பெரிய தட்டில் பட்டு போன்ற கோதுமை அல்லது வேறு தானியமாவை வைத்து அவ்விசைக் கருவியை வாசிப்போமாயின் இராகத்திற்குத் தக்கவாறு உருவங்கள் உண்டாகின்றன. இதன்றியும் ஓசையினின்று உண்டாக்கப்பட்ட உருவத்தைக் கொண்டு மீண்டும் அவ்வோசையை எழுப்பக்கூடும் என்பது இசைசேகரக்கருவி (Gramaphone) இக்காலத்தில் நிரூபிக்கின்றது. நல்லிசையானது, நமது மூளை, நரம்பு முதலிய தத்துவத்தில் ஊடுருவிச் சென்று அங்கு அவற்றை அசைவித்து தேக ஆரோக்கியம் விளைவிப்பது யாவரும் அறிந்த விஷயமே. அப்பர் மாசில் வீணையின் இன்பத்தை மாலை மதியம், வீசுதென்றல், மூசுவண்டறைப் பொய்கைக்கும், சிவபெருமான் திருவடி நிழலுக்கும் ஒப்பிடுகின்றார். ஆதலால் இன்னிசையானது மருந்துபோல் தேகத்திற் சென்று நோய்களிற் சிலவற்றையேனும் குணம் செய்யுமென்பது யாவரும் ஆமோதிக்கக் கூடியதே.



திருஞானசம்பந்தர் இசையானது செவிக்கு மிகவும் இனிய இசை என்பதை புறச்சமயத்தாரும் அங்கீகரிக்கின்றனர். ஆகையால் நாம் வேலைசெய்து அலுத்து இளைப்பாறும் சமயத்தில் இவ்விசை யாரேனும் பாடினால் நமக்குச் சற்றுக் களை தெளிதல் போலும் உற்சாகம் தரும் உணவு போலும் நாம்அதை அனுபவிக்கின்றோம். ஆனால் இது போன்ற இசைகள் வேறு நூல்களில் இல்லையாயெனின் உலகத்திலுள்ள எவ்வகை இசைத்தத்துவத்திற்கும் இடங்கொடுப்பதாயும் அவற்றிற்கும் அறியக்கூடா தத்துவங்களும் (யாழ்மூரிபோல்) அமைந்தது புகலிவேந்தர் இன்னிசையாம்.

ஆகையால் சம்பந்தர் இன்னிசை அநுபவத்தில் மிகவும் சிறந்ததாக காணப்படுகின்றது. அவர் இயற்றமிழும் பல துறைகளில் பயன்படும். இலக்கியத்தில் எந்த துறையை அநுபவிக்க வேண்டுமென்றாலும் அந்த துறையைச் சம்பந்தரில் காணலாம். (Epic, dramatic, lyric, didactic, Elegiac etc.,) இதன்றியும் இலக்கணவகையில் தொல்காப்பிய சூத்திரம் ஒவ்வொன்றிற்கும் சம்பந்தர் தேவாரத்தில் உதாரணம் காட்டலாம். இவை மாத்திரமல்ல, ஆராய்ச்சித் துறையில் (Research work) நமது தேச சரித்திரம், தென்இந்திய ஆறும் நூற்றாண்டின் பூகோள இலக்கணம், அக்காலத்திய நாகரிகங்கள். முதலியனவற்றை ஆராய்வதற்குத் திருஞான சம்பந்தர் தேவாரம் பயன்படும். இவை யன்றியும் சைவ சமயம் எவ்வாறு அக்காலத்தில் இருந்த தென்றும், அக்காலத்தில் சைவ சமயப் பற்றால், ஜாதி, தொழில், செல்வம், வறுமை, நாடு முதலியவற்றால் உண்டாகும் மனவேற்றுமை நீங்கி ஒருமனதுடன் ஒத்து உழைத்த சைவர் இலக்கணத்தையும் அவர் தேவாரத்தில் காணலாம். சைவ சமயத்தாரிடம் ஒரு வகை வலிய கட்டு ஏற்பட்டிருந்தது. அதை எதற்கு உதாரணமாய்ச்

சொல்லலா மென்றால் மகம்மதிய மதம் ஆரம்பத்தில் எவ்வாறு அம்மதஸ்தரை ஒருவரோடொருவரைப் பிணைத்ததோ அவ்வாறே சைவ சமயம் சைவரைப் பிணைத்திருந்தது. இன்றேல் பல நூற்றாண்டுகளாய் வேர் ஊன்றி யிருந்த பௌத்தமும், சமணமும் அவர் காலத்தில் வேரற்றுப்போக நேராது. இது மாத்திரமன்று, ஸ்ரீமத்சங்கராச்சாரிய சுவாமிகளுக்கும் உற்சாகமும் ஊக்கமும் கொடுத்து வடநாட்டுக்கு அவரைச் செல்ல வைத்தது புகலி வேந்தர் புனிதமொழி யென்றும் ஒருவாறு கூறலாம். சம்பந்தரைச் சங்கராச்சாரியர் செய்த துதியும், அந்தணர்களான மலையாளர்களைத் திருப்பழூர் திருப்பதிகத்தில் சம்பந்தர் கொண்டாடிப் பாடியதும் உற்று நோக்கின் திருஞான சம்பந்தர் தென்னாட்டில் செய்த சமயத் தொண்டின் தொடர்ச்சி சங்கராச்சாரியார் வடநாட்டில் செய்த சமயத் தொண்டு அன்றென சொல்லுவதற்கு இடமில்லை.

ஆகையால் புகலி வேந்தர் புனித மொழி ஞானமார்க்கத்தில் அசையாது நிலைநிறுத்தக் கூடிய அத்துவித விளக்கமாயும், அதுவே பக்தி மார்க்கத்தில் உழைப்பினும் (Practical Work) திரிகரண சுத்தியாலும் உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து தானென்னும் தன்மையற்று முன்னிலையாகிய இறைவனைத் தன்னிலும் கண்டு களித்தற்கும் வழிகாட்டும். அப்பர் கூறிய

“தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியிற் தலைப்படும்
தன்னிற் றன்னை யறியில னாயிடில்
தன்னிற் றன்னையும் சார்தற் கரியனே.”

என்பதுவுமது. அதையே நித்தியகர்ம அனுஷ்டானத்தில் கொண்டு வந்து எத்தொழிலிருந்தாலும், இத்தொழிலோடு



பிணைப்பட உலக வாழ்க்கையே இறைவன் தொண்டென அபேதமாய் நின்று ஒழுகி வாழ்நாள் கழிக்கும் வகையையும் புகலி வேந்தர் புனிதமொழி இனியதாய் விளக்கி நம்மைச் சீர்திருத்தி சன்மார்க்கத்தில் ஒழுக வைக்கும். ஆகையால் புகலிவேந்தர் பாசுரங்கள் இம்மையிலும் மறுமையிலும் நமக்கு வேண்டிய சாதனங்கள் எவற்றிற்கும் பயன்படுமென்பது திண்ணம்.

“அருஞா னம்வல்லார் அழுந்தை மறையோர்
பெருஞா னமுடைப் பெருமா னவனைத்
திரு ஞான சம்பந் தன செந்தமிழ்கள்
உருஞான முண்டாம் உணர்ந்தார் தமக்கே”

# சைவசமய சாரம்

[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்]

1. உலகத்தைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்கின்ற மூன்று தொழில்களையுஞ் செய்தற்குக் கருத்தா ஒருவர் இருக்கிறார்.

2. அந்தக் கருத்தா சிவபெருமான்.

3. சிவபெருமான் என்றுமுள்ளவர், எங்கும் நிறைந்தவர், என்றுஞ் சுத்தர், எல்லா மறிபவர், எல்லாம் வல்லவர், பெருங் கருணையுடையவர்.

4. சிவபெருமானுக்குத் தேவி அவருடைய சத்தியாகிய திருவருள்.

5. சிவபெருமானொருவரே விக்கினேசுரர், சுப்பிரமணியர் முதலிய பல மூர்த்திகளாகிநின்று அருள்செய்வர்.

6. ஆன்மாக்கள் சிவபெருமானுக்கு என்றும் அடிமைகள்.

7. சிவபெருமானை மனம் வாக்குக் காயம் என்கின்ற மூன்றினாலும் வழிபடுதல் ஆன்மாக்களுக்குக் கடன்.

8. மனசினாலே செய்யும் வழிபாடுகளாவன:—சிவ பெருமானைத் தியானித்தல், அவருடைய குணங்களைச் சிந்தித்தல் முதலானவைகள்.

9. வாக்கினாலே செய்யும் வழிபாடுகளாவன:—சிவ பெருமானுடைய திருநாமங்களை உச்சரித்தல், அவருடைய பெருமையைப் பேசுதல் அவருடைய சரித்திரங்களைப் படித்தல் முதலானவைகள்.

10. காயத்தினாலே செய்யும் வழிபாடுகளாவன:—சிவ பெருமானுடைய திருமேனியைத் தலையினாலே வணங்குதல், கண்களினாலே தரிசித்தல், கைகளினாலே கும்பிடுதல் பூசித்தல், கால்களினாலே வலம் வருதல் முதலானவைகள்.

11. சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடே அசுத்தர்களாகிய ஆன்மாக்களைப் பந்தித்த பாசமாகிய நோய்க்கு மருந்து.

12. வழிபாடாகிய மருத்துக்கு அநுபானமாவது மெய் யன்பு

13. வழிபாடாகிய மருந்துக்குப் பத்தியங்களாவன:—உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல், தாய்தகப்பன் உபாத்தியாயர் குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், வறியவர்களுக்குக் கொடுத்தல் முதலிய புண்ணியங்கள்.

14. வழிபாடாகிய மருத்துக்கு அபத்தியங்களாவன:—கொலை களவு கள்ளுக்குடித்தல் மாமிசம் புசித்தல் பொய் பேசுதல் வியபிசாரம் சூதாடுதல் முதலிய பாவங்கள்.

15. சிவபெருமான் தமக்கு ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று நிற்கும் இடங்களாவன சிவலிங்க முதலிய திருமேனியும் மெய்யடியார்களுடைய திருவேடமும்.



16. சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் அறிந்து வழிபட்டு உய்யும்பொருட்டு அருளிச்செய்த முதனூல்கள் வேதம் சிவாகமம் என்ற இரண்டுமாம்.

17. சிவபெருமானை வழிபடும் பொருட்டு ஆன்மாக்களுக்குக் கிடைத்த கருவி மனிதசரீரம்.

18. மனித சரீரத்தைப்பெற்ற ஆன்மாக்களுக்குச் சிவபெருமானை வழிபடும் பொருட்டு யோக்கியதையை வருவிப்பது சிவதீட்சை.

19. சிவதீட்சை பெற்றுக்கொண்டு வேத சிவாகமப் படியே சிவபெருமானை வழிபடுகிற சமயம் சைவ சமயம்.

20. சைவசமயிகள் ஆவசியகமாகத் தரிக்கத்தக்க சிவ சின்னங்களாவன: விபூதியும் உருத்திராட்சமும்.

21. சைவ சமயிகள் ஆவசியகமாகச் செபிக்கத்தக்க சிவ மூலமந்திரம் பஞ்சாட்சரம்.

22. சைவசமயிகள் ஆவசியகமாக ஓதத்தக்க சிவஸ்தோத்திரங்களாவன: தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்கின்ற அருட்பாக்கள் ஐந்தும்.

23. ஆன்மாக்களுக்குச் சுதந்தரமாகிய அறிவும் தொழிலும் இல்லை. ஆதலினாலே, சுதந்தரமாகிய அறிவுந் தொழிலும் உடைய சிவபெருமானை நோக்கி "அடியேங்கள் பாவங்களை விலக்கிப் புண்ணியங்களைச் செய்து உம்மை மெய்யன்போடு வழிபட்டு உய்யும் பொருட்டு உம்முடைய திருவருளைப் பொழிந்தருளும்" என்று பிரார்த்தித்து அந்தத் திருவருளை முன்னிட்டு, அதன் வழியே ஒழுகல்வேண்டும்.

24. சிவபெருமானை விதிப்படி மெய்யன்போடுவழிபட்டவர் அவருடைய திருவடிக்கீழ் நித்தியமாகிய பேரின்பத்தை அநுபவிப்பர்.

"இந்து சாதனம்"

# ஞாயிறு வழிபாடு

[வை. சுந்தரேசவாண்டையார், ஆசிரியர், திருவையாறு]

**எ**ல்லாம்வல்ல இறைவன் தனக்கென ஒருபெயரும் ஒருருவமும் இல்லானெனினும் அன்பர்கள் அவனுக்கு ஆயிரம் திருப்பெயரும் திருவுருவமும் அமைத்து வழிபட்டுவருகின்றனர். அங்ஙனம் வழிபடற் கமைத்துக்கொள்ளப்பெறும் திருவுருவங்கள் பெரும்பான்மையும் கல், மண், பொன், மணி முதலியவைகளாலாயவை.

இங்ஙனம் மனிதன் கைப்பட இயற்றியவையேயன்றி மனிதர்முயற்சியால் ஆக்கப்படாதனவும், இறைவன் ஒருவன் உண்மையையும் அவனது வரம்பிலாற்றலையும் மக்கட்குத் தெரித்து நிற்பனவுமான இயற்கைப்பெரும்பொருள்களையும் அன்னோன் திருமேனியாகப்பாவித்துப் பலர் வழிபடுவர். அவ்வியற்கைப்பெரும்பொருள்களாவன: "நிலம் நீர் நெருப்பு உயிர்கால் நீள விசும்பு நிலாப் பகலோன் புலனாய மைந்தன்" (திருவாசகம்) என்பவையாம். இவற்றை அட்டமூர்த்தம்என வழங்குவர், "எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவா றிதென்னையே" என்றார் புகலியர் பெருமானும். அட்டமூர்த்தங்களில் ஏனையவற்றினும் ஞாயிற்றினையே கற்றோரும் மற்றோரும் நம்நாட்டிற் பெரும்பாலும் ஒரு பொழுதே, இருபொழுதே, முப்பொழுதே தமக்கியன்ற பொழுது வணங்கிவருதல் கண்கூடு.

இங்ஙனம் ஞாயிற்றினை வழிபடும்வழக்கம் மலிந்திருப்பதேன் எனில், ஆணவ இருளில் அழுந்திக் கிடக்கும் உயிர்கட்குத் தன் இன்னருள் ஒளி ஈந்து அவ்விருளைப் போக்கி அறிவு இச்சை செய்கைகளைக்கிளர்வித்தியக்கும் இறைவனையொப்பப் புறவிருளில் மறைபட்டுக் கிடக்கும் மன்னுயிர்த்



தொகைகட்குத் தன்னொளி ஈந்து கண்ணொளிவிளக்கி அவற்றின் அறிவிச்சை செய்கைகளைக் கிளர்விப்பது ஞாயிறேயாம்.

இதனாலன்றோ "உலக முவப்ப வலனேர்பு திரிதரு-பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு-ஓவற இமைக்கும் சேண் விளங் கவிரொளி" எனச் செவ்வேற்செம்மலுக்குப் பரிதியை உவமைகூறினர் நக்கீரப்பெருநாவலர். ஞாயிறின்றேல் ஒளியெங்கே, வளியெங்கே, முகிலெங்கே, மழையெங்கே, புனலெங்கே, பயிரெங்கே, உடம்பெங்கே, உணர்வெங்கே; ஒன்றுமிராது. ஆதலாலே ஞாயிற்றைக் கண்கண்ட தெய்வமாக மண்கொண்டு பரவும்.

ஞாயிற்றினைவழிபடும்வழக்கம் நம் தமிழ்நாட்டில் எக்காலத்தில் தோன்றியது என அறுதியிட்டுரைக்கமுடியாது. பல்பலாயிர ஆண்டுகட்கு முன்தோன்றிய தமிழ்மக்களின் சேமவைப்பாகவுள்ள தொல்காப்பிய நூலுள்,

> "கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்று கூறப்படுவதால் அந்நூல் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே ஞாயிற்றினைவழிபடும் வழக்கம் நம் தமிழ்நாட்டிலிருந்திருத்தல் வேண்டுமென்பது துணியப்படும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், தொல்காப்பிய அகத்திணையியலுரையில், சூரியனை எல்லாநிலத்திற்கும் பொதுத்தெய்வமென்று கூறுதலாலும், இறையனார் களவியலுரையில் அதன் ஆசிரியர், "தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும், ஆதித்தனையும் தெய்வம் என்று வேண்டுவர்;' எனக் கூறுதலாலும் ஞாயிற்றினை வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டுள்ள தென்பது மேலும் உறுதிபெறும்.

இஃது இங்ஙனமாக, *முதற்குலோத்துங்கன்காலத்திலே தான் (கி. பி. 1070 - 1120) நம் தமிழகத்தார் ஞாயிற்றினை வழிபடத்தொடங்கினரென்று 1926-27-ஆம் வருடத் தென்னிந்தியக் கல்வெட்டு இலாகாவின் அறிக்கை கூறுவது† பொருந்துவதன்று என்பதற்கு மேற் கூறியவையே போதிய சான்றாகும். வேறும் சில கூறுதும்.

பதினொன்றாம் நூற்றாண்டின்பிற்பகுதியிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நம் தமிழகத்தை

*இம்மன்னன் 49 ஆண்டுகள் அரசாண்டான் என்று உயர்திரு. T. A. கோபிநாதராயரவர்கள் கூறியுள்ளார்கள். இதுபொழுது உடையார்பாளையந்தாலூகா **காமரசவல்லி** என்ற ஊரில் இம்மன்னனது 50 ஆம் ஆண்டுக் கல்வெட்டு இருக்கின்றமையின் இவனது ஆட்சிக்காலம் ஐம்பது ஆண்டுகளாகும்.

†Annual report on South Indian Epigraphy for 1926—1927. page 79. para 19

The temple dedicated to the Sun and the attendant planetary deities at Suryanarkoil in the Tanjore District owes its existence to Kulottunga I. The village itself takes its surname after the local temple. The Surya temple is an unique one of its kind in South India and it possibly shows the influence of Gahadavala kings of Kannauj who were worshippers of the Sun. From the existence of the image of the God Visvesvara with his consort Visalakshi in the Temple at Suryanarkoil, it has been inferred that the worship of the Sun was introduced from Benares. (Annual report for 1908 paragraph 60). In No 229 of 1927 the God is called குலோத்துங்க சோழமாத் தாண்டாலயதேவர், and in No 231 of 1927 குலோத்துங்க சோழமாத்தாண்டாலயத்து சூரியதேவர், thus combining in one the name of the originator of the temple and the worship of the sun newly introduced.



ஆட்சிபுரிந்த முடிமன்னனாகிய முதற்குலோத்துங்கனுக்கு நெடுநாள் முந்தித்தோன்றிய நூல்களுள் நற்றிணையில், பசுங் கதிர் மதியமொடு சுடர்கண்ணுக'' என்றும், சிலப்பதிகாரத்தில் ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' என்றும், அந்நூலுரையில் அடியார்க்குநல்லார், ''பாலைக்குத் தெய்வம் பரிதியஞ் செல்வனும் திகிரியஞ்செல்வியுமெனக் கோள்க'' என்னும், திருநாவுக்கரசர் தேவாரத்தில், ''அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்- அருக்கனாவ னரனுரு வல்லனோ'' என்றும் கூறுவதாலும் ஞாயிற்றினைவழிபடும் வழக்கத்தின் தொன்மை விளங்கும்.

சிலப்பதிகார கனாத்திறமுரைத்தகாதையில் ''பகல்வாயிலுச்சிக் கிழான்கோட்டம்''என்று ஒரு கோயிற்பெயர் காணப்படுவதாலும்; உச்சிக்கிழான்-சூரியன், அன்றி, பகல்வாயில் உச்சிக்கிழான் - பகற்பொழுதுக்கு வழியான உச்சிக்கிழானென்றுமாம்' என்றும், முறையே அரும்பதவுரையாசிரியரும்* அடியார்க்குநல்லாரும் உரைகூறுவதாலும் முதலாங் குலோத்துங்கனுக்குப் பலநூற்றாண்டுகட்கு முன்னரே நம் நாட்டில் ஞாயிற்றினுக்குக் கோயிலும் உண்டு என்பதும் பெறுதும்.

மேற்காட்டிப்போந்தவற்றால், ஞாயிற்றினை வழிபடும் வழக்கம் நந் தமிழகத்தில் தொன்றுதொட்டு உளது என்பதும் முதலாங்குலோத்துங்கன்காலத்திற்றான் அவ்வழிபாடு நம் தமிழகத்திற் புதிதாகத் தொடங்கப்பட்டதென்று 1926-27-ஆம் ஆண்டுக்கல்வெட்டிலாகாவின் அறிக்கை கூறுவது பொருத்த மில்லையென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குவதாகும்.

*இவ் வரும்பதவுரை யாசிரியர் கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

மேலும், *சூரியனார்கோயிலிலுள்ள சூரியதேவர்க்குக் "குலோத்துங்கசோழ மாத்தாண்டாலையத்து சூரியதேவர்" எனப் பெயர் உண்டென்று அக்கோயிற் கல்வெட்டுகள் உணர்த்துவதுகொண்டு, அக்கோயில் முதற்குலோத்துங்க மன்னனால் எடுப்பிக்கப்பட்டதென்று கொள்ளுவதுமாத்திரமே பொருத்தமுடைத்தாகும்.

# திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு

[ஈ. ந. தணிகாசல முதலியார், பி. ஏ., பி. எல்.]

## 9. திருஞானசம்பந்தர் பதிக அமைப்பின் ஒருவகைக் கலை

திருஞானசம்பந்தர் பதிக முதற்பாகம் தருக்கவொழுங்காய் நிற்பதைக் கண்டோம். ஆயினும் கவியை அழகு செய்விப்பது கலையாகும். இவர் கலை ஞானம் "உவமையிலாக் கலைஞானம்" எனச் சேக்கிழார் கூறுவதால், ஒரு பதிகத்தை எடுத்து அதன் கலையின் அந்தம் கூடியவாறு கண்டறிவோமாக. சிவஸ்தலங்களில் தில்லை முதலியனவற்றில் பாடிய பதிகங்களில் உள்ள கலைஞான மேன்மை பல அறிஞரால் விளக்கப்பட்டிருக்குமாதலின், அத்துணைச்சிறப்பாய்க் கொண்டாடப்படாத சிவஸ்தலமொன்றில் பாடிய பதிகத்தைக்

* இச்சூரியனார்கோயில், தஞ்சைஜில்லாவில், தென்குராங்காடுதுறையாகிய ஆடுதுறை ரயில்வே நிலையத்திலிறங்கிக் காவிரியைக் கடந்து திருப்பனந்தாளுக்குப் போகும் பெருவழியில் ஒருமைல் தூரத்திலுள்ளது. முதற்குலோத்துங்கன்காலத்து ஆலய அமைப்பு எவ்வாறு இருந்தது என்று ஆராயப் புகுவார்க்கு இவ்வூராலயம் பெரிதும் பயன்படும்.



காண்போமாக. "திருஇடும்பாவனம் - பண் - நட்டபாடை" என்னும் புகலிவேந்தர் பதிகத்தை அவர் கலையொளியில் நோக்குவோமாக.

இப்பதிகம் சைவசித்தாந்த மகா சமாச வெளியீடான சம்பந்தர் தேவாரத்தில் 28, 29 பக்கங்களில் காணப்படும். பெரும்பாலும் அவர் பதிகங்கள் பெற்றதுபோல் இதுவும் 11 செய்யுட்கள் அமைந்தது. இத்தலம் அக்காலத்தில் கடற்கரையில் இருந்ததாகவும், அக்கரையினருகில் திருஇடும்பாவனக் குன்று தன்மேலுள்ள கொடியாடும் மாளிகைகளுடன் காணப்பட்டதென்றும், அம்மலையினின்று வரும் நீர் வீழ்ச்சிகளைக்கும் கடற்கரையை அலைகளும் தாக்குமென்றும் சம்பந்தர் திருக்கடைக்காப்புச் செய்யுளில் காண்கின்றோம் :—

"கொடியார்நெடு மாடக்குன்ற *ளூரிற்கரைக்† கோல
இடியார்கட லடிவீழ்தரு மிடும்பாவனத் திறையை
அடி‡யாயுமந் தணர்காழியு ளணி§ஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொல பறையும்வினை தானே."

இத்தகைய கடற்கரை யருகேயுள்ள கடலும் விலையுயர்ந்த முத்துச் சிப்பங்கள் மேய்வதாகும். அதில் வரும் வங்கங்களும் திரவியம் நிறைந்து வருவனவே. "தனமார்தரு" என்னும் முதற் செய்யுள் அடைமொழி சங்கக் கடலுக்கும் பொருந்

* அருளூர் - (Water fall) நீர்வீழ்ச்சி.

† "கரைக்கோல" என்பது, 'கரைக்கு' + 'ஓலம்' எனச் சந்தி பிரித்தலிலாம். ஓலமிட்டுக்கொண்டு, இடிபோன்ற ஓசையோடு கடல் அந்நீர்வீழ்ச்சிக்கு மலையடிவாரத்தில் அடிவீழ்ந்து நமஸ்கரிக்குமென்னும் உருவகம் அமையும்.

‡ ஆயும் (Does not mean 'investigating') - போற்றும்; வணங்கும்; பரவும்.

§ அணிஞான (In prose order) என்பதை ஞானஅணி யென்று அன்வயப்படுத்துக.

தும்; வங்கத்திரளுக்கும் பொருந்தும். இத்தோற்றத்தில் வங்கங்களை நங்கூரமிட்டு நிறுத்தித் தம்பதிகளான இளைஞர் (வாலிபத்தாலும் செல்வத்தாலும் கெடாது) பக்திநிறைந்தோராய்க் கீழிருந்து மலையின் மீதேறி மலர்களைக் கொய்து சிவபெருமானைத் திருக்கோயிலில் வழிபடுவர் - பசிவினையும் பழவினையு மொருங்கே ஒழிப்பதுபோல் ஆங்காங்கு மலையில் தீமூட்டுவர். அக்குன்று பலசனக் கூட்டம் வந்து சேர வசதியற்றதாயினும், அங்கு செல்பவர் உண்மையான தவ நிலையில் நிற்கும் சைவரேயென ஆளுடைய பிள்ளையார் முதற் பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்:—

“மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர *ளுந்திச்
†சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மி‡கு குன்றில்
§இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே.”

பெயரால் முல்லையோ,பாலையோ எனச் சந்தேகிக்க வேண்டிய இக்குறிஞ்சியானது, குறவர்களுக்கு வசிக்கு மிடமாகாது கலையார் தருபுலவோருக்கு வசிப்பிட மென்றும், புலவரெனில் நல்குரவு பெற்றவரல்லர்; மதிலோங்கு மில்லங்களும், மணமோங்கும் பொழில்களும் கனியோங்கு முன்றில்களும், நீரோங்கு வயல்களுமுடையவ ரென்றும் பிள்ளையார் நம்மை

---

*உந்தி=நங்கூரமிட்டு; anchoring.

†சினமார்தரு Ought not to be taken as an epithet for அரக்கன் who died long long ago. சினம்=Fire; தீ; ஆர்தல்= நிறைத்தல் or உண்டாக்கல். சினம் ஆர்தரு is an epithet for ‘இனமாதவர்’—The crew after anchoring their boats in the sea-shore lit fire for cooking etc, on the hill.

‡இனம்=Genuine. பரிசுத்தமான.

§இடும்பன் மலைகளைக் காவடியிற் சுமந்து செய்தது இம்மலையின் கோயிலென்பர்.



அறிய வைப்பார். இக்குறிஞ்சி, பழனத்தின் இயல்பு பெற்று மருதத்திணையை அங்கு மயங்க வைக்கும் - ஏனெனில் சாதாரணக் குறிஞ்சிபோலாகாது அக்குன்று குடிவளம், நிலவளம், நீர்வளம் நிறைந்திருப்பது இப்பதிகத்தின் 2-ம் செய்யுளாலும், 3-4 செய்யுட்களாலும் 5, 6, 7 செய்யுட்களாலும் முறையே விளங்கும்.

தம்பதிகளாய் வழிபடச் சென்ற அன்பர்களின் பெருமானும் மலைமகளைப் பாகம் *வைத்து மகிழ்ந்தவரே. அவரும் அம்மலையில் தன்னந்தனியே திருக்கோயில் கொண்டிராது, கலைநிறைந்த புலவோர் மதில்களால் (பொழிலுக்கு இலைகள் போல்) சூழப்பெற்று விளங்குவர். கோயிலினின்றும் தொழுது வெளிப்படுந் தொண்டர் (திருக்கோயிலை வலம் வருவது போல்) வலம்புரிச்சங்கின் வளைவுகள்போல் (Spiral course) நடந்து அடிவாரத்திற்குச் செல்லும்போது படிப்படியாய்க் காணுந் தோற்றங்கள் பஞ்சேந்திரியங்களை முறையே களிப்பிக்கும். மூக்கால் முரலக்கூடியது மிகவும் உயரமான தலத்தில் பரிமளிக்கும் ஏலத்தின் வாசனை. சீலம் மிகுந்த சித்தத்தினையுடைய அன்பர் சிந்தனையால் தேகத்தில் பித்தம் மிகா வண்ணம், அது அவர் திருக்கோயில் சூழும் போது அவருக்குத் தேக சுகமும் கொடுக்க அமைந்தது போலும்.

“சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழு மெந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு முலகத்தவர் நலமார்

---

* “மலையார்தரு மடவாளொடு பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர் காவல்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரும் இடும்பாவன மிதுவே”

[காவல் - மதில்; தரும் in last line - ஒக்கும் invert for prose -order பொழில் சூழ் as சூழ் பொழில்]

கோலம்மிகு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே"

என்பார். வாசனைப் பொழிலைவிட்டு வலம்வருந் தொண்டர்கள் இறங்கும் வழியான கணவாய் இனிய வாழைக் குலைகள் பழுத்த முற்றங்களையுடைய மலைவீதியாய் திகழும். அங்குள்ளோரும் சிவபக்தராதலால் சென்றவர் நாவானது இனிக்கவே செய்வர்.

"பொழிலார்தரு குலைவாழைகள் எழிலார்திகழ் போழ்தில்*
தொழிலான்மிகு தொண்டரவர் தொழுதாடிய முன்றில்"

இத்தகைய முன்றிலைத் தாண்டி வரும்போது, மேற்கண்ட குடிவளத்திற்குத்தக்க நீர் வளத்தால் உண்டான தோற்றத்தின் நற்காட்சி கண்ணைக்கவரும். அது,

"செந்தாமரை மலர்மல்கிய செழுநீர்வயற் கரைமேற்
கொந்தார்மலர் புன்னைமகிழ் குரவம்"

அன்றோ? அங்கிருந்தும் "அரஹர" என்று எந்தையைவிளிக்குமோசைக்கு, எதிரொலி, திருக்கோயில் நிற்கும் குன்று தருவது, "ஆ" (நான் இதோ இருக்கின்றேன்) எனச் சிவபெருமானிருக்கையினின்று பதில் †வருவதொக்கும். இவ்வாறு தோத்திரஞ்செய்து, எதிரொலி பெற்றுக்களித்த பக்தர் மலைச்சிகரத்தில் காணப்படும் திருக்கோயிலைப் பின்னுந் துதித்துக் கீழே செல்வார்.

(தொடரும்)

*போழ்து (does not indicate here time) - a cleft between two hills; கணவாய்.

†"எந்தாயென விருந்தானிட மிடும்பாவன மிதுவே"



**உரை நடை:**—இறுதியிரண்டடியை முதலிற் கொள்க.

**உரை:**—தெளிவாக உகைத்தே போந்து நாய்போன்ற (இழிவுடைய) நம்மை ஆட்கொண்ட தகுதியுடைய பெருமானை அடைவதற்குத் தளராது ஊக்கமாயிருப்பவர் தாம் (பிறபொருள் வசப்படாது) தாமாகவே இருக்குந் தம் வயமுடையாராவர். ஆதலால், ஐம்புல விடயங்களில் நீங்கள் செல்லவே கூடாது. புயங்கக் கூத்துடைய பெருமானது அழகிய திருவடிகளையே மிகுதியுஞ் சிந்தியுங்கள். ஒழிந்தன வெல்லாம் நமக்கு வேண்டப்படா. அவற்றைப் பற்றாது அவைதாமே அகன்றொழிய விட்டு விடுங்கள்.

**குறிப்பு:**—புலன்கள்=பொறிக்கு விடயமானவைகள். மிகவே, என்றது இறை நினைவே மிகுதிப்பட்டுப் பிற நினைவுகள் இலவாதலை வேண்டி. மிக்க=மிகையான. இறை நினைவொழிந்த பிறநினைவுகள், மிகையாமென்ற கருத்தைப்பற்றி 'மிக்க வெல்லாம்' என்றார். நகவே =விளங்கவே. யாரும் அறிய. மெய்யன்பர் சிரிக்கும்படி யென்றுரைப்பாருமுளர். தகவு=பெருந்தன்மை. உ

தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு விதிவகையும், யாமார் எமதார் பாசமார் என்ன மாயம் இவைபோகக் கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே.

**உரை நடை:**—இறுதியடியில் பொய்நீக்கிப் பொன்னடிக்கே போமாறமைமின் எனமாறுக.

**உரை:**—தம் வயமுடையார் தாமே தமக்கு உறவினராவர். தாமே தமக்குக் கட்டளை விதிக்கும் வகையினர். நாம் ஆர், எம்முடையது யாது, நம்மைப் பந்தித்த மலக்கட்டு யாது, இவைகளெல்லாம், என்ன மயக்கங்கள். இவை யொழியும்படி, நமது அரசனுடைய பழைய அடியாரோடு சேர்ந்து அவனது திருவுள்ளக் குறிப்பே நமது நோக்கமாகக் கொண்டு நிலையாதனவற்றை விடுத்து புயங்கக் கூத்தனுடைய நம்மை யாள்கின்றவனது அழகிய திருவடிக்கே போய்ச் சேருமாறு தகுதியாகுங்கள்.

தி. ௩க

187/61

**குறிப்பு:**—சிவமாந்தன்மையுடையார்க்குச் சுற்றமும் விதிவகையும் தாமேயாவர். மேலே, 'செய்தனவே தவமாக்கும்' என்றது காண்க. ஆர் என்பதை 'எமது' 'பாசம்' என்பவற்றோடு சேர்த்தமை வழுவமைதி. சிவமேநோக்குவார், தம்மையும் தமதுடைமையும்பாசமுமாகிய இவற்றை நினைத்தல் கூடாதென்பது குறிக்கப்பட்டது. ௩

அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்
டைக், கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண் டிருமின்
திருக்குறிப்பைச், செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோக
கத்தே நமைவைப்பான், பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே.

**உரை:**—அடியாராகிய நீங்கள் எல்லாரும், உலகில் விளையாடுதலைத் தூரவிட்டிடுங்கள், மணம்பொருந்திய இறைவன் திருவடியையே போய்ச் சேர்ந்து அவனது திருவுள்ளக் குறிப்பைக் கடைப்பிடித்திருங்கள். பாவம் ஏறுதற்குரிய உடம்பு ஒழியக் களைந்து சிவலோகத்திலே நம்மை அமர்த்துவானாகிய நீறணிந்த திருமேனியையுடைய புயங்கக் கூத்துடையானது மலர் நிறைந்த திருவடிக்கே உங்கள் உள்ளத்தைச் செலுத்துங்கள்.

**குறிப்பு:**—விளையாட்டென்றது, தம்மையும் உலகையும்பற்றிய நினைவுகளின் சார்பாயுள்ளவற்றை, அவை பயனில்வாதலின் விளையாட்டென்றார். கடி=மணம். திருக்குறிப்பை என்பதைக் கடைக்கொண்டு என்பதனோடு முடிக்க. செடி=பாவம், வரும்பிறவிக்கேதுவாய ஆகாமிய மென்பாருமுளர். பொடி=திருநீறு. ௪

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் காலம்இனி
யில்லை, உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன்போ
வதற்கே ஒருப்படுமின், அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்
துள் அணியார்கதவ தடையாமே, புடைபட் டுருகிப்போற்று
வோம் புயங்கன் ஆள்வான் புகழ்களையே.

**உரை:**—கோபம், ஆசை முதலிய பிணிகளைக் களையுங்கள். மேன்மைப்பட வேறொரு சமயம் இல்லை. முதல்வனது திருவடிக்கீழ்ப் பெரிய அடியார் கூட்டத்துடன் போயடைவதற்கே இசையுங்கள். சிவலோகத்தின் அழகு நிறைந்த கதவுகள் அடைபடுமுன்னமே போய்ச் சேர்வோம். அதன் மருங்கு பொருந்தி, உள்ளமுருகிப் புயங்கப்பெருமானாகிய நம்மை யாள்பவனது கீர்த்திகளையே துதிப்போமாக.



**குறிப்பு:**—வெகுளியை விடுமின், வேட்கை நோய் மிக, ஓர் காலம் இனியில்லையென் றோதிப் பொருளுரைப்பாருமுளர். சாத்து=திரள்; கூட்டம். சிவபுரம்=வீட்டிற்கு உருவகம். அதன்புடை அபரமுத்தித் தானம்போலும். ஊழிமுடிவிற் சாயுச்சியத்திற் குரியரல்லார் மீட்டும் பிறத்தல் கூடுமாதலின், 'அணியார் கதவடையாமே' என்றார். 'புடைபட்டு' என்பதற்கு உடம்பின் பகுதிகளெல்லாம் உருக்கத்தி லீடுபடும்படி எனப் பொருளுரைப்பது முண்டு. ௫

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் தாளே
புந்திவைத்திட், டிகழ்மின் எல்லா அல்லலையும் இனிமேல்
இடையூ றடையாமே, திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று
சிவன்தாள் வணங்கிநாம், நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.

**உரை:**—புயங்கப் பெருமானது திருவடிகளையே புகழுங்கள், வணங்குங்கள், அவைகளுக்கே மலர் சூடுங்கள். அவைகளையே அறிவிற் பதித்து எல்லாத் துன்பங்களையும் இகழுங்கள். இனிமேல் நாம் ஒருவகையான தீங்கும் நம்மை யடையாவண்ணம், விளங்கும் புகழ் நிறைந்த சிவபுரத்துக்குப்போய்ச் சேர்ந்து அங்கே சிவபெருமான் திருவடிகளை வணங்கி, அங்கேவாழும் அன்பர்முன் போய் மனமுருகி நிற்போமாக.

**குறிப்பு:**—'புயங்கன்றாளே' என்பது நடுநிலைத் தீபகமாய்ப் 'புகழ்மின்' முதலிய வினைமுற்றுக்களோடும், புந்திவைத்திட்டு என்பதனோடு மியைவது. ௬

நிற்பார்நிற்கநில்லாவுலகில் நில்லோம்இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்
நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின் [கே
பிற்பால் நின்று பேழ்கணித்தாற் பெறுதற் கரியன் பெம்மானே

**உரை :**—நிலையில்லாத உலகிலே நிற்க விரும்புவார் நிற்பாராக. அங்கே நாம் நிற்கமாட்டோம். இனி நாம், அழகினால் தன்னையே ஒத்த திருமேனியுடைய புயங்கப் பெருமானாகிய நம்மை யாள்பவனது பொன்போன்ற திருவடிகட்கே நாம் செல்வோமாக. அவனது பொன்னடி யடைதற்கே நிற்கின்றீ ரெல்லீரும், தாமதியாமல் நிற்குமுறையையே கடைப்பிடியுங்கள். பிற்பட்ட பகுதியில் நின்று பெருமை பாராட்டினால் இறைவன் பெறுதற் கரியனாவன்.

**குறிப்பு :**—பொற்பால், என்பதற்குப் பொன்னின் தன்மையெனப் பொருள் கொண்டு பொன்னிறொளி போலுந் திருமேனியென்று உரைத்தலுமொன்று. 'பொன்னடிக்கே' என்பது நடுநிலைத் தீபகம். பேழ்கணித்தல் = தன்னைப் பெரிதும் மதித்தல். விழித்தல் என்று பொருளுரைப்பாரு முளர். ௭

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந் திறந்தபோதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே.

**உரை :**—சிவபெருமானது பேரின்பம் நீங்காதிருக்கப் பெற்றீர்கள்; நீர் (அதனை விடுத்துக்) கடத்தற்கரிய உலக மயக்கமுற்றுப் பிற்பாடு, துன்புற்று அம்மா வென்றலறாதே, சிவபுரத்தின் அழகிய பெரு மணிகள் பதித்த திருக்கதவுகள் திறந்திருக்கும்போதே திருமாலறிய வொண்ணாத திருப்புயங்கப் பெருமான் திருவடிகளைப் போய்ச் சேர்வோமாக.

**குறிப்பு :**—பேரின்ப நுகர்ச்சியை நெகிழ விட்டால், வாசனை மலத்தாற் கேடு வருதல் கூறப்பட்டது. மூன்றாமடியில், 'சிவபுரத்து' என்பதைத் திருமாமணிக்கதவம் என்பதோடு முடிக்க. ௮

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளா
ஆரப் பருகி ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர் [முதம்
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற் கிடந்து புரளாதே.

**உரை :**—சிவபுரஞ் சேர்வதை யெண்ணி, உள்ளத்தைத் திருத்தமாக அமைத்து (இறையடியையே) நினையுங்கள். போரில் விளங்கிப் பயன்படும் வேல்போன்ற கண்ணையுடைய உமைபாகனாகிய புயங்கப் பெருமானது திருவருள் அமுதத்தைநிரம்ப உண்டு முடிவுறாத அன்பு மிகுதிப்படப் (பேரின்பத்தில்) ஆழ்வீர்கள். நிலையற்ற பொய்வாழ்விற் கிடந்துபுரளாமல், சிவனது திருவடியையேபோய்ச் சேரவிரும்புங்கள்.

**குறிப்பு :**—வாசனா மல மொழிதற் பொருட்டுத் திருவைந்தெழுத்தை நினைத்தலும், அயரா அன்பினாற் சிந்தித்தலும், கூறப்பட்டன. போர, போகவென்பதன் மரூஉ. 'போத' வென்பதன் மரூஉவாகக்கொண்டு, 'போதிய அளவு' என்று முரைப்பர். 'சிவன் கழற்கே, போரப் புரிமின்' எனமாறுக. ௯

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின் சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே.

**உரை :**—(அன்பினாலே) புரண்டு வலம் வருவாராயும், வணங்குவாராயும் இறைவனைப் போற்றித் துதிப்பாராயும் இப்பொழுதே வந்து ஆளாகாமற் போனீராயின் பிற்பாடு, மருட்சி யடைவீர். அறிவினுட் கலக்கமடைந்து மயங்குவீர்கள். உங்களை யார் மதிப்பார். (ஒருவரும் மதியார்). தெளிவடைவீராகில், ஆட்படுதலாகிய இதனைச்செய்யுங்கள். சிவலோக நாதனாகிய புயங்கப் பெருமானது (வீடுநல்குந்) திருவருளை உலகத்தே யார்பெறுதல்கூடும். ஐயோ! ஐயோ!! ஐயோ!!!

**குறிப்பு:**—இப்பதிக முழுவதும் விரைவில் வீடுபெற விரும்புவார்க்கு அடிகள் மொழிந்த எச்சரிக்கை அறிவுரையாக இருக்கின்றது. இறையன் பில்லாரை மக்களும் பொருட்படுத்தா ரென்ற கருத்துப்பற்றி, 'மதிப்பார் ஆர்' என்றார். உலகவாழ்வைக் கருதின் ஆண்டும் நயமில்லை யென்றவாறு. 'நின்னருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே' என்ற தேவாரமுங் காண்க. மயங்குதல் = வழியறியாது திகைத்தல். அகலிடம் = பூமி. அந்தோ = ஐயோ. இரக்கம்பற்றி மும்முறை கூறினர். ௰

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# திருப்படையெழுச்சி

## பிரபஞ்சப் போர்

### கலிவிருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.

**உரை:**—சிவஞான மாகிய வாளினைக் கையிலேந்திய தலைவரது பிரணவ நாதமாகிய பறையை அறையுங்கள். பெருமை பொருந்திய விடையிலேறுந் தலைவர்க்குத் திங்களாகிய (அறிவாகிய) வெள்ளைக் குடையை எடுத்துப் பிடியுங்கள். ஆக்கத்தைத்தருந் திருவெண்ணீறாகிய மெய்ப்பையினுள்ளே முழுவதும் புகுந்து கொள்ளுங்கள். மாயாகாரியமாகிய சேனைகள் வந்து நம்மைத் தாக்குமுன்னே அருள் வானிலுள்ள இன்பப்பதியை நாம் கைப்பற்றுவோமாக.

**குறிப்பு.**—பிரணவ பஞ்சாக்கரம், வாசனாமலம் நினைக்க ஒலிக்கப்படுவது. சிவஞானமாகிய அறிவினுள் இறைவன் விளங்குதலின், 'மதிவெண்குடை' என்றார். ஆன=நன்மைக்கான. வானம்=சிதாகாசம் அல்லது அருள். அடைய=முற்றிலும். க

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே.



**உரை:**—தொண்டர்களே முன்னணியாகச் செல்லுங்கள். அன்பர்களே புடைசூழ்ந்து செல்லுங்கள். ஒளிமிகுந்த வலிமையுடைய யோகிகளே! பெரும்படைப் பகுதியைச் செலுத்துங்கள். திட்டமான உடல்வன்மையுடைய சித்தர்களே! பிந்திய அணிவகுப்பிற் செல்லுங்கள். தேவநாட்டை, நாம் துன்பப்படை வாராமல் ஆள்வோமாக.

**குறிப்பு:**—ஞான நிலையிலுள்ள அடியார்களை முன்னும், கிரியை வல்லாரை மருங்கிலும், யோகிகளைப் பெரும்படை நிலவும் நடுவிலும், உடல்வலியின் பொருட்டுக் காயசித்தி முதலியவற்றிற் சிறந்த சித்தர்களைப் பின்னணியிலும் வைத்தனர். 'அண்டர் நாடு' என்பது வீட்டுலகத்தைக் குறிக்கும். உ

*திருச்சிற்றம்பலம்*

திருப்பெருந்துறையில் அருளிய

# திருவெண்பா

## அணைந்தோர் தன்மை

### நேரிசை வெண்பா

*திருச்சிற்றம்பலம்*

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து.

**உரை நடை** :—இறுதி இரண்டடியை முதலிற்கொள்க.

**உரை** :—செம்மையுடைய அழகு பொருந்திய திருப்பெருந்துறை முதல்வனாகிய தேன்போன்ற இன்பம் நல்குகின்ற செஞ்சோதியை உள்ளத்தே பொருந்தா திருந்தேன். கொடிய இருவினையும் வெந்தொழியுமாறு உடம்பு உருகி இப் பொய்வாழ்வும் நீறிப் போகா திருக்கின்றதே நான் என்செய்வேன்?

**குறிப்பு** :—உடம்புள்ளவரை, பிராரத்த வினை நுகரக் கிடத்தலின், உடம்பும் வாழ்க்கையும் ஒழிய விரும்பினமை கூறினர். இறைவனை அயரா அன்பினால் வழிபட்டால், உடல் வாழ்க்கை யொழிந்திருக்குமென்று குறிப்பிக்கிறார். ௧

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்—தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து.

**உரை நடை** :—இறுதியடிக ளிரண்டையும் முதலிற்கொள்க.

**உரை** :—மேலான மேலோரின் மேலோனே, நீக்க முடியாத பேரின்பப் பித்தினை மிகுவிக்கின்ற அப்பன் திருப்பெருந்துறைப்



பெருமானே என்று என்னிடம் கூறுவார் ஒருவர்யார். நான் அவரை வணங்கி, ஆரவாரிப்பேனா, அலறுவேனா, ஆடுவேனா, பாடுவேனா, பார்ப்பேனா என்னசெய்வேன்.

**குறிப்பு**:—தாழ்ந்து என்பதை ஆர்க்கோ, என்பதோடு முடிக்க. துணை யன்பரின்றித் தாம் ஆனந்த உணர்ச்சியைப் புலப்படுத்த முடியாது வருந்துவதை இதனுட் குறித்தார். ௨

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான்.

**உரை நடை** :—இறுதி யிரண்டடியை முதலிற் கொள்க.

**உரை** :—திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பெருமான் உலகத்தே வந்திருந்து அவனது ஆயுதப் பையுட் கிடந்த வேலினை எடுத்து என் உள்ளத்தே அழுந்தும்படி, எய்துவிட்டான். அவன் அங்ஙனஞ் செய்தற்கு யான் செய்த தவறியாதென அறிந்திலேன். அவனது செவ்விய திருவடிக் கமலங்களையே கை கூப்பினேன். உய்தி கூடு முறையின் தோற்றமும் அடியேன் அறிந்திலேன்.

**குறிப்பு** :—வேல், ஞானத்திற்கு அறிகுறி, வழிபாடொன்றே யன்றி வேறுபாயத்தை நாடாதிருக்கவும் இறைவன் குருவாய் வந்து ஞான மளித்தனன் என்றார். மடுத்துக் கோத்தான் = அழுத்திப் பொருத்தினன். ௩

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து.

**உரை** :— அழகிய நல்ல திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பேருளாளன், எனது முற் பிறப்பிற் செய்த இருவினைகளை அடியோடறுத்து எனக்கு எதிர்ப்பட்டு நின்றான். இனி வரும் பிறப்பினைத் தொலைத்த பெருந்துறையாளன், இப்பிறப்பில் வரக்கூடிய துயரத்தைத் தீர்க்கும் மருந்துமாவன்.

**குறிப்பு:**—முன்னை வினை சஞ்சிதத்தையும், பின்னை வினை ஆகாமியத்தையும், இப்பிறப்புத் துயர் பிராரத்தத்தையுங் குறிக்கும். 'முன்னின்ருன்' என்பதை முதலடியின் முதற்கண் கொண்டு, முன்னின்று, வேரறுத்து என முடிப்பது முண்டு. ௪

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும்—இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று.

**உரை :**—எல்லா வுலகையும் படைத்த வேதியனுகிய பிரமனும் திருமாலும் அடிமுடி காணுது மயக்கங் கொள்ளுதற் கேதுவாய இறைவன் திருப்பெருந்துறையின்கண் வீற்றிருந்த பிரான், இப்போது எனது உள்ளத்திலே நீங்காது தங்கி வாழ்வன். இதனை அறிவார்க்குப் பந்தயம் (பரிசிலளிப்பேன்).

**குறிப்பு :**—அறையோ, பந்தயத்துக் கழைத்தல். சொல் என்ற பொருளுமுண்டு. அறிவார்க்கறையோ என்பதை இறுதியிற் கொள்க.

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

**உரை :**—அப்பனுகிய திருப்பெருந்துறையாளன் என்னை ஆண்டருளிப் பேரருளால் பார்க்கும் அமுதமாவான். அழியாத பேரின்பமாவானுகிய சிவபெருமான் எழுந்தருளி வந்து, என்னை மிக்க ஆசை மிகுகின்றவனுக்குவான். பிறப்பினைத் தொலைப்பான். என் மனத்தைச் சொல்லுதற்கரிதாய மிக்க களிப்பு வடிவமே யாக்குவான்.

**குறிப்பு :**—அத்தன், பெருந்துறையான் மருந்து இன்பம் வந்து பித்தென்னை யேற்றும். பிறப்பறுக்கும் என் மனத்தை வந்து பேச்சரிதாம் ஆக்கும் என முடிக்க. ௬

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே—சீரார்



திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

**உரை :**—சிறப்புப் பொருந்திய அழகிய தெற்கின்கண் உள்ள திருப்பெருந்துறைப் பெருமான், எனது உள்ளத்திற் பொருந்திய ஒப்பற்றவன் வளர்க்கும் அருளொளியானது, பிறவிக்கு மீண்டு வாரா வழியினைக் கொடுத்து, எனக்கு மாறுபடாது வந்து தெவிட்டாத அமுதமாய் அமைந்தது.

**குறிப்பு:**—மாறின்றி=பகையின்றி; பகையிலதாக்கி, என்று முரைப்பர். ௭

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

**உரை:**—எல்லார்க்கு மேம்பட்ட எல்லையற்ற சிறப்புடைய பெருமானே, எல்லார்க்குங் கீழ்ப்பட்ட அடியேனை, யாருக்குங் கிடைத்தறியாத பேரின்பத்தினுள் அமைத்தனையாகிய உனக்கு எமது பெரியோனே கைம்மாறு செய்யும் விதத்தை அறிந்திலேன். ௮

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணுச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும்.

**உரை :**— மும்மூர்த்திகளும், மூப்பத்துமூன்று தேவர்களும் காணமுடியாத சிவபெருமான் குதிரை யேறி நிலவுலகத்தே இறங்கி வந்து காட்டியருளிய நீண்ட திருவடிகளை வணங்கவே, உடம்பினுள்ளே பேரின்ப வுணர்ச்சி வளரும்.

**குறிப்பு:**—முப்பத்துமூவர்; உருத்திரர் - பதினொருவர்; ஆதித்தர்; பன்னிருவர் - அசுவினி தேவர் - இருவர்; வசுக்கள் - எண்மர். திக்குப் பாலகர் முதலியோர் பிறதேவர்கள். மா=குதிரை. ௯

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாந்—தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து.

**உரை:**—திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பேரருளாளன், அமுதவடிவமாய் என் உள்ளத்தே வந்திருந்து என்னை ஆட்கொண்டருளினன். அவனது திருவடிக ளிரண்டையுமே (இடைவிடாது) நினைந்திருந்து நெஞ்சமே (நீ வேண்டிய) எல்லாவற்றையும் யாசித்துக்கொள். அவன் எல்லாந் தந்தருள்வான்.

**குறிப்பு:**— பெருங் கருணையாளன், மனத்தே வந்து இருந்தென்னை ஆண்டான், நெஞ்சே இணையடியே சிந்தித்திருந்து இரந்து கொள், எல்லாந் தருங்காண் என முடிக்க. ௧௦

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

**உரை.**—சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறை முதல்வன், பிறவித் துன்பத்தின் தொடர்ச்சியை அறுத்து அருளொளியாய், அறியாமை இருளை நீக்கி, என் நுமுள்ள பேரின்பத்தைப் பெருக்கி அன்பினை உளதாக்கி, என்னுடைய உள்ளத்தையே தமது பதியாக விரும்பிக்கொண் டருளினன். ௧௧

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# பண்டாய நான்மறை

## அனுபவத்துக் கையமின்மை உரைத்தல்

### நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை.

**உரை:**—பழமையாகிய நான்கு வேதங்களும் அவன்பாற் சேரா. திருமாலும், பிரமனும் அவனைக் கண்டதுகூட இல்லை. கீழ்ப்பட்ட என்னை அடிமையாக ஆட்கொண்டருளும் எமது திருப்பெருந்துறை அரசனுக்கு மனமே பதிலுபகாரம் உண்டோ? சொல்.

**குறிப்பு:**—கோகழி=திருவாவடுதுறையையுங் குறிக்கும். ௧

உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த—வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு.

**உரை:**—உயிரைப் பற்றிய மும்மலமும் நீங்கியொழிய, குதிரையின்மேல் எறிவந்த அருட் கொடையாளனாகிய பெருமான் சொரிகின்ற தேனையைய பேரின்ப வெள்ளத்தைத் தரும், அவன் வீற்றிருக்குந் திருப்பெருந்துறையைத் துதியுங்கள். துதிக்கவே, பிறவிக்காட்டின் மூலமுங் கெட்டொழியும்.

**குறிப்பு:**—மும்மலம்=ஆணவம், கன்மம், மாயை. 'வெள்ளந் தரும்' என்பதற்கு, 'வெள்ளந் தருகின்ற' எனப்பொருள் கொண்டு, 'தரும்' என்பதை வள்ளலென்பதோடு முடிப்ப துண்டு. கரு=மூலம், வேர். ௨

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து.

**உரை :**—காட்டிலே வேடனாகியும், கடலில் வலைஞனாகியும், நாட்டிலே குதிரைப்பாகனாகியும் தோன்றியருளி (உயிர்களாகிய) நமது வினையைத் தொலைத்து அருள்புரியும் திருப்பெருந்துறைப் பெருமானது அழகிய திருவடிக் கமலங்களை நெஞ்சே மயக்கந் தீரும்படி துதிப்பாயாக.

**குறிப்பு :**—பார்த்தன் பொருட்டு வேடனாயினமை பாரதத்துட் காண்க. பிறகதைகள் திருவிளையாடலுட் காண்க. மருளும், என்பதில் உம்மை இறந்தது தழுவியது. வினையோடு மயக்கமும், என்பது கருத்து. ௩

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்.

**உரை :**—தேவர்போய் வலம்வந்து வணங்கித் துதிக்குஞ் சிறப்பமைந்த திருப்பெருந்துறையை நன்குவணங்கித் துதிக்கும் நம்மவர் (உலகில் பயனுற) வாழ்ந்தார்களும், கொடிய வினையைத் தொலைப்பாரும் ஞாலமே வணங்கி வாழ்த்தத் தக்கவருமாவர். ௪

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

**உரை :**—எழுச்சியுடைய திருவாவடுதுறைப் பதிக் கரசனை, நமது துன்பங்கள் போயொழியும்படி திருவுள்ளங்கொண்டு, திருப்பெருந்துறை அடைந்து, பின், பண்போன்ற சொல்லினளாகிய உமையம்மையோடு உத்தரகோசமங்கை சேர்ந்து அதனைவிட்டு நீங்காதிருந்த பெருமானைக் காண்க.



**குறிப்பு :**— நெஞ்சிற்கு இது கூறப்பட்டது. எழுகோகழிக்கரசை நம்மிடர்கள் போயகல எண்ணி, பெருந்துறையை நண்ணிப் பண்...............காண் எனமுடிக்க. ௫

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு.

**உரை :**—அறிதற்குரிய கருவிகளெல்லாம் பேரின்ப மயமாகக் கண்டு போற்றும் அன்பர்கள், தமது பிறப்பு நீங்கும்படி கண்டு வணங்கும் பெருமை யுடையானை, எப்போதுந் திருப்பெருந்துறையை விட்டு நீங்காதவனை மனமே நீ வாயாரப் புகழ்வாயாக.

**குறிப்பு :**— காணும்=அறியும். கரணம்=அகக் கருவி, புறக் கருவி முதலியன. ௬

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து.

**உரை நடை:**—நல்லமருந்...............'வைத்து' என்பதை முதலிற்கொள்க.

**உரை :**—(பிறவி நீக்குவதற்கு) நல்ல மருந்தான பெருமான் திருவடிகளை உள்ளத்தே கொண்டு, பேசப்பட்ட உண்மைப்பொருள்களுக்கு எல்லையான முடிவாய, இன்பமாய், சொல்லினைக் கடந்த குற்றமற்ற மாணிக்கம் போன்றவனது புகழை யுரைத்துப் பெரியவழியானவனே எனத் துதித்துப் பிறப்பினை யொழித்தேன்.

**குறிப்பு :**—பெருந்துறை, அப்பெயருடைய பதிக்கும், பெருநெறியாய பிரானுக்கும் வழங்குவது. ௭

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# திருப்படையாட்சி

## சீவ உபாதி ஒழிதல்

**பன்னிரு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

*திருச்சிற்றம்பலம்*

**க**ண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும்ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

**உரை நடை :**—மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படுமாயிடிலே என்பதை முதலிற் கொள்க.

**உரை :**—மீன்பொருட்டு வலைவீசிய, வேடனாகிய கடவுள் வந்து நமக்கு வெளிப்பட்டுவிட்டால், இரண்டு கண்களும் அவனுடைய திருவடியைக்கண்டு மகிழ்வன ஆதல் நிகழாது. பெண்களுடைய வாழ்க்கையில், என்னுடைய வாழ்க்கை கீழ்ப்படுதல் நிகழாது. உலகங்களிற்போய்ப் பிறந்திடும் வண்ணம் கடவுள் திருவடிகளை மறந்திடுதல் நிகழாது. திருமாலறியாத இறைவன் திருவடித்தாமரை இரண்டும் வழிபடுதல் நிகழாது. பண்ணோடுகூடிய மகிழ்ச்சியைத் தருகின்ற பாடலுமாடலும் பழகுதலுமாகாது. நல்ல பாண்டிநாட்டினை உடைய பெருமானது படையின் வீரச்செயல்களைப் பாடுதலும் நிகழாது. விண்ணுலகினர் மகிழ்வதற்கேதுவாகிய வேறுபடுத்திக் காட்டுஞ் சிறப்புத் தோன்றுதலு மாகாது.

**குறிப்பு :**—இறைவன் வெளிப்பட்டு உயிர் அவனோடு அத்துவிதமாய்க் கலந்த இடத்தே, சிவானுபவ உணர்ச்சியே நிலைத்து உயிர்



*"கரணந்தன்னிற் செயல்தொறுங் கண்டுகொள்நீ" †"உந்திடுங் கரணந்தன்னிற் செயல்தொறு முணர்ந்துகொள்ளே" என்பனவுமது. இந்நுட்ப முணர்ந்துகோடற்குத் தூலாருந்ததிநியாயம் பற்றிக் கைப்பொருளை வீழ்த்தித் தெளிதன்முதலிய தூலத்துள் வைத்துக்காட்டுப. இனி அரூபசொரூபியாய் நிற்புழிப்படும் ஐந்தவத்தையினியல்பு கூறுதற்கெடுத்துக்கொண்ட இவ்வதிகாரணத்தின் அதனோடியைபில்லாத சுத்தத்தின்கட்படும் ஐந்தவத்தை கூறுதற்கு ஓரியைபில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியன மாத்திரையே போலுமென மயங்காமைப்பொருட்டு வேறுமைந்தவத்தையுள அவை முன்னர்க் கூறப்படுமென்னுந் துணையே கூறுவார் அதுவாங்கு என்றொழிந்தார். இக்கருத்தேபற்றி ‡"பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பறவருளா லாங்கே—குறியொடு மைந்தவத்தை கூடுவர் வீடுகூட" என்றொழிந்தார் வழிநூலாசிரியரும். இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத்தைந்தவத்தைகட்கு முறையே மூலமாய கேவலஞ் சகலஞ் சுத்தமென்ற மூன்றனுள் வைத்துத் தன்னுண்மையெனப்படுங் கேவலத்தினியல்பு சகசமலத்துணராதென்பதனானே பெற்றும். ஏனைச் சகலத்தினியல்பு வருகின்ற சூத்திரத்தினுஞ் சுத்தத்தினியல்பு அப்பாலைச் சூத்திரத்தினும் பெறுதும்.

---

### ஐந்தாஞ் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துத னுதலிற்று.

சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

---

* சிவஞானசித்தியார், நான்காஞ்சூத்திரம். ஙரு. அறிதருமுதல்வ.

† ௸, ௸. ஙு. உந்திடுங்கரணங்.

‡ ௸, ௸. ஙரு. அறிதருமுதல்வ.

ஐந்தவத்தைப்படும்வழிக் கருவியும் உயிரும் அமைச்சும் அரசுமேய்ப்பநிற்பின் அவையே யமையுமாகலான் முதல்வனால் ஆண்டைக்காகற்பாலதொரு பயனில்லைபோலு மென்னுங் கடாவையாசங்கித்து ஆண்டும் இன்றியமையாது வேண்டப்படுவதாய முதல்வனுடைய உதவியை அறிவிக்குமுகத்தானே இரண்டாஞ் சூத்திரத்தினோதிய துணைக்காரண முதற்காரணங்களதிலக்கண முணர்த்துதல் இவ்வஞ்சாஞ் சூத்திரத்தின் கருத்து. இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும். மாயை கன்மங்கள் திரோதானசத்திக்குக் கருவியாய் அதனுளடங்குதலிற் றமது முதலுபகாரமெனப்படுந் திரோதான சத்தியதிலக்கணங் கூறவே அவற்றதிலக்கணமுங் கூறியவாறாதலறிக.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—

மேலைச்சூத்திரங்களில் அங்ஙனங் கூறிப்போந்த உயிரானே மெய்வாய் கண் மூக்குச் செவியென்பன தத்தம்விடயங்களை இஃதின்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனமறியுந் தம்மையுந் தம்மையதிட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும் அறியமாட்டா: அவ்விந்திரியங்கள்போல் உயிர்களுந் தமதறிவிற்கு வியஞ்சகமாகிய முதல்வனது சிற்சத்தியான் மேற்கூறிப்போந்த இருவகை பஞ்சவத்தையினின்று வினைப்பயன்களை யறிந்து அநுபவிக்குந் தம்மையுந் தம்மைச் செலுத்திநிற்குந் திருவருளையும் அறியமாட்டா; உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் கரணத்தானன்றிச் சங்கற்பத்தான் அதிட்டிக்கு முதல்வன் சந்நிதிமாத்திரையினும் ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்று.

ஐம்பொறிகளைக் கூறியது உபலக்கணமாகலின் ஏனைக்கருவிகளும் அவ்வாறாதல் கொள்ளப்படும். அற்றாகலினன்றே *"பொறி புலன் கரண மெல்லாம் புருடனாலறிந்து" என்றார் வழிநூலாசிரியரும். விடயங்களை யறிவுழி முதல்வன் உடனின்று செலுத்துவனாயின் அவ்விடயங்களோடொப்ப முதல்வனையும் அறிதல் வேண்டுமென்பாரை நோக்கி, அளந்தறிந்தென்றொழியாது அறியாவென்றார். ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலால் திரோதான சத்தி

* சிவஞானசித்தியார், ஐந்தாஞ்சூத்திரம். க.



யின்மேனின்றது. இதனுள் விளம்பியவுள்ளத்து மெய் வாய் கண் மூக்களந்தறிந்தறியாவென்றது ஓரதிகரணம்; ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின் தமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே யென்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணருமென்றது.

மே—தாமரையிலையி னீர்போற் புருடன் பற்றற்று நிற்பப் புருடன் சந்நிதியிற் புத்திதத்துவமே ஐம்பொறிவழியான் விடயங்களை அறியுமெனவமையும் அவ்வாறன்றிக் கருவிகளோடு கூடிப் புருடனே அவத்தைப்படுமென மேற்கூறியதமையுமாறென்னையெனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

உணர்விற்கேதுவாகிய பொறிகளை உணர்வென் றுபசரித்தார்.

அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது அவையொன்றையும் விடயியாவாகலான்.

ஏ—அதற்குப் பிரமாணமென்னை யென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந்தாலன்றி அவை ஒரு விடயத்தையும் விடயிக்கமாட்டா வாகலான் ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணருமென மேற்கொண்டது.

ஐம்பொறியை ஆண்டங் கரசாய் உளநிற்ப
ஐம்பொறிகள் உள்ள மறியாவாம்—ஐம்பொறியிற்
காணாதேற் காணாது காணுமுளங் காணாதேல்
காணாகண் கேளா செவி.

உ—உயிர் அங்ஙனம் ஒற்றுமைப்பட்டு நின்று செலுத்துதலும் அவை உயிரையின்றி அமையாமையும் எற்றாற்பெறுது மென்பாரை நோக்கி எதுவை வலியுறுத்துதனுதலிற்று.

அரசு ஆய் - அரசன் அத்தாணி மண்டபத்தின் வைகித் தன்கீழ்க் கருமஞ்செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி

ஆளுமாறுபோல,—உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப - உயிர் ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய விடயங்களிற் செலுத்தி யாண்டு இலாடத்தானத்தின் நிற்றலான்;—ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம் - அரசனாலேவப்பட்டோர் ஏவிய கருமமாத்திரையினன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல அவ்வைம்பொறிகள் உயிரை அறியமாட்டாவாயின. அற்றேல், ஐம்பொறிகள் உயிரானன்றியறிதல் அமையாதாயினும் உயிர் ஐம்பொறிகளானன்றியும் அறிதல் அமையும்போலுமெனின்:—ஐம்பொறியில் காணாதேல் காணாது காணும் உளம் காணாதேல் காணா கண் கேளா செவி - ஒரு கருமஞ்செய்தற்கண் அரசரும் அமைச்சர் முதலாயினாருந் தம்முள் இன்றியமையாதவாறுபோல ஒன்றனை விடயித்தற்கண் உயிரும் ஐம்பொறிகளுந் தம்முள் இன்றியமையா. அன்னவாதல் உயிர் ஐம்பொறியினீங்கிச் சொப்பனத்தானத்தின் எய்திய வழிக் கண்டுகொள்க. நிற்பவென்னுஞ் செயவெனெச்சம் 'மழைபெய்யக் குளநிறைந்தது' என்புழிப்போல நிற்றலானெனக் காரணப்பொருட்டாய் நின்றது. இவ்வாறுரையாக்கால் இஃதேதுவின் பொருள் வலியுறுப்பதாய உதாரணமாதற் கேலாமை அறிக.

## இரண்டாம் அதிகரணம்

இனி இதுவுந் தமது முதலாலே உணருமென்றது.

மே—கருவி சடமாகலிற் சித்தாகிய உயிரானன்றி அமையாவாயினுஞ் சித்தாகிய உயிர் முதல்வனது உபகாரத்தை அவாய்நிற்பதன்று. அவாவுமாயின் முதல்வனும் அவ்வாறே பிறிதொன்றனுபகாரத்தை அவாவுமெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடும் என ஈசுவரவிகாரவாதி முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இம்முறைமை தமக்கொரு முதலுடையவற்றிற்கேயன்றி ஏனைப்பொருட்கின்மையின் வரம்பின்றியோடுமாறில்லையென்பார், தமது முதலென்று உடம்பொடு புணர்த்தோதினார். தம்முணர்வின்றமியென்றதுமது. தத்துவங்களும் உயிருந் தமக்கொரு முதலுடையனவாதலும் முதல்வனுக்கு அஃதின்மையும் மேற்கூறிப்போந்த சூத்திரங்களாற் பெறப்பட்டன என்பது கருத்து.



இஃயோன்மாத் தன்னாலே யுணரு மிந்திரியங்களைப் போலத் தானுந் தன்னை உணராது நிற்றலான்.

ஏ—உயிர் ஐம்பொறியிற் சடமன்மையான் அவற்றை யெடுத்துக்காட்டி மேற்கோடல் ஈண்டைக் கமையாதென்பாரை நோக்கி அதனைச் சாதித்தனுதலிற்று. சடமுஞ் சேதனமுமாய வேறுபாடு பற்றித் தம்முள் ஒவ்வாவாயினுந் தம்மையுந் தமது முதலையும் அறியமாட்டாமைக்கண் ஐம்பொறியும் உயிருந் தம்முள் ஒக்குமாகலின், அதுபற்றி அங்ஙனமேற்கோடல் அமையுமென்பது கருத்து.

மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டித்த(து)
என்னும் மறையின் இயல்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணா உளம்வினையால் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணான் சிவன்அசத்தை இன்று.

உ—தன்னாலுணரும் இந்திரியங்களை ஈண்டைக்கு உவமை கூறின் அவ்விந்திரியங்கட்கு வரும் பயன் அவற்றினாலொற்றித்துக் காணும் உயிர்க்காயவாறுபோல உயிர்க்குவரும் இன்பத்துன்பப் பயனும் உயிரானொற்றித்துக்காணும் முதல்வனுக் காதல்வேண்டுமென்பாரை நோக்கி அங்ஙனமாகாமை கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

மன்னு சிவன் சந்நிதியின் மற்று உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய் - ஈண்டுக் கூறிய கருதலளவையேயன்றி நிலைபெற்ற முதல்வனது சந்நிதியிற் பிரபஞ்சஞ் செயற்படுகின்றதென்றோதும் வேதப்பொருளையும் அறியாது பிணங்குகின்ற பேதாய்,—உளம் சொன்ன சிவன் கண்ணா வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண் - உயிராவது தமக்கெனவோர் காரணமின்றித் தன்பொருட்டே அறிவனவாய அவ்விந்திரியங்கள்போலன்றி அவ்வேதத்துள் எடுத்தோதப்படும் முதல்வன் தனக்குக் காட்டாகி நிற்பத் தான்செய்த வினைக்கீடாக ஒன்றனையறிந்து நிற்கும்; அவ்வேறுபாடு அறிவாயாக.—இன்று (ஆகலாற்)சிவன் அசத்தை எண்ணான் - அங்ஙனங் காட்டாகி நிற்பினுந் தனது சந்நிதியின் அசத்தெல்லாஞ் சூனியமாகலான் மங்கலவடிவினனாய முதல்வன் அவ்வுயிர்போல் அவற்றை அநுபவியான்.

இதனுட் சிவனென்றது மன்னுசிவனென்புழிப் பேரின்பத்திற்குக் காரணமென்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்

தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது; ஈ நிர்ன்னசிவனென்புழி முற்றுணர்வினனென்னும் பொருட்டாய்க் காட்டாதற்குரிய இயைபுணர நின்றது; எண்ணன் சிவனென்புழித் தூயதன்மையனென்னும்பொருட்டாய் அசத்தையெண்ணுமைக்குரிய இயைபுணர நின்றது. ஆகலாற் கூறியது கூறலன்மையுணர்க. அஃது அம்முப்பொருளுடைத்தென்பது சோம சம்புபத்ததி வியாக்கியான முதலியவற்றுட் காண்க. சிவதத்துவவிவேகத்துள் மூவகைப்படுத்தோதிய பொருளும் இவையேயாமாறு கண்டுகொள்க. ஈண்டு உலகமென்றது உயிர்களை. மறையினியலும் பொருளை மறையினியலென்றுபசரித்தார்.

ஈண்டுச் சந்நிதியென்றது அவிகாரவாதிகள் கூறும் அபிமுகமாத்திரையன்றென்பார் சொன்னசிவன் கண்ணுமென்றார். சிவசத்தி அவ்வக்காரியங்களின் உன்முகமாதலாகிய சங்கற்பமே ஈண்டுச் சந்நிதியெனப்படுமென்பதாம். ஆகலாமென்பது சொல்லெச்சம். இன்றுதல் யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர் என்புழிப் பெறப்படும். இக்கருத்தேபற்றி *"மாயை மருவிடான் சிவனவன்க—ணுறைதராதசேதனத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். †"உன்னுதாத்தேகிடந்த கீடமுறுவதெல்லா—முன்னுடைய தென்றுய்நீ யுற்றனையோ—மன்னுயிர்க—ளவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்—செவ்வகையே நின்றசிவன் பால்" என்றதும் இவ்வியல்பு நோக்கி.

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல—மெய்யவனில்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டுடனாய் மன்னுதலைக் காண்.

உ.—உயிர் அங்ஙனமுணர்த்த வுணருங்கால் முதல்வனின் வேறு நின்றுணருமோ ஒன்றாய் நின்றுணருமோவென்பாரை நோக்கி அவ்விரண்டியல்புமின்றி நின்றுணருமாறுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

---

* சிவஞானசித்தியார், ஐந்தாஞ்சூத்திரம். ௬. இறைவன்றன்.

† திருக்களிற்றுப்படியார். ௮௭.



வெய்யோன் ஒளியில் ஒடுங்கி - ஞாயிற்றினொளியினடங்கி,—விளங்காது - அதனின் வேறாய் விளங்கித் தோன்றுதலின்றி,—வெய்யோனை ஆகாத மீன்போல - அதுவாயொழிதலுமில்லாத நாண்மீன்கள் அஞ்ஞாயிற்றானே ஒளியுடையவாமாறுபோல,—கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை மெய் அவனில் கண்டு - கண்டுங் கேட்டும் உண்டும் உயிர்த்துந் தீண்டியும் அறியப்படும் ஐவகை விடயங்களையும் உயிர் மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து,—உடனாய் மன்னுதலைக்காண் - வேறாதலும் ஒன்றாதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கி உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக.

நாண்மீன் முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றினுடைய ஒளியேயென்பது வேதநூற்றுணிபாகலான் அஃதீண்டைக்குவமையாயிற்று. உயிரொன்னும் எழுவாய் மேலைவெண்பாவினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

அருளுண்டாம் ஈசற் கதுசத்தி யன்றே
அருளும் அவனன்றி இல்லை—அருளின்(று)
அவனன்றே இல்லை அருட்கண்ணார் கண்ணுக்(கு)
இரவிபோல் நிற்குமரன் ஏய்ந்து.

உ.—அங்ஙனமாயினும் உயிர்கட்குப் பலவேறு வகைப்பட உணர்வுநிகழ்தலின் அஃதுணர்த்துதல் வேறுபாட்டானுயதெனல் வேண்டும். வேண்டவே, நிருவிகாரியென்னுஞ் சுருதியோடு முரணி முதல்வன் விகாரியாவான் செல்லுமென்பாரை நோக்கி விகாரியாகாமை யுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

அருள் ஈசற்கு அன்றே உண்டாம் - உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற்கணுளதாகிய இரக்கம் முதல்வனுக்கு அநாதியேயுள்ளது.—அது சத்தி-அவ்விரக்கம்வேறு பொருளன்று முதல்வனுக்குளதாகிய சத்தியேயாம்;—அருளும் அவனன்றி இல்லை அவன் அருளின்று அன்றே இல்லை - இரக்கமும் அவனுங் குணமுங் குணியுமாகலின் அவ்வருளும் முதல்வனையின்றி யமையாது முதல்வனும்அதனையின்றி யமையானாய், - அருட்கண்ணார் கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்து நிற்கும் அரன்-ஞானக்கண்ணுடையாருணர்விற்கு ஞாயிறு தன்னொளியோடு தாதான்மியமாயியைந்து நிற்குமாறுபோல்

அவ்வருளோடு தாதான்மியமாயியைந்து நிற்பன் முதல்வன்;ஆகலாற் றன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடும். ஆகலாற் றன் வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடுமென்பது குறிப் பெச்சம். இவ்வியல்பு சித்தாந்த நெறியுணர்ந்தார்க்கன்றி விளங்கா தென்பார் அருட்கண்ணார் கண்ணுக்கென்றார். சத்திய துண்மையும் அதனியல்பும் நீக்கமின்றி நிற்குமன்றே என்பதனுள் வகுத்துரைத் தமையின் ஆண்டுக் காண்க.

---

## ஆறாஞ் சூத்திரம்

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

சூ—சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துதனுத லிற்று.

சூத்திரக்கருத் துணர்த்துதனுதலிற்று.

மேலைந்து சூத்திரத்தானுங் கூறிப்போந்த பொருள்களுள், யாது சத்து யாது அசத்தென்னும் ஐயநீக்குதற்குச் சத்தினியல்பும் அசத்தினியல்பும் இவையென அவ்விரண்டும் இலக்கணத்தாற் றம் முண் மயங்காதவாறு வரைந்து வைத்துணர்த்தி உண்மை அதிகாரத் திற்குத் தோற்றுவாய் செய்யுமுகத்தானே இலக்கண ஒத்துட் கூறு தற்கு எஞ்சிநின்ற பதிப்பொருள திலக்கணங் கூறுதல் இவ்வாறுஞ் சூத்திரன் கருத்து.

இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—

தம்முணர்வின் தமியாகிய முதற்பொருள் அளவைகளானறி யப்படும் இயல்பிற்றெனின், அங்ஙனமறியப்படும் பிரபஞ்சம்போல் அழிபொருளாகிய அசத்தாம் : எவ்வாற்றானும் அறியப்படாத இயல் பிற்றெனின், அங்ஙனமறியப்படாத முயற்கோடுபோலச் சூனியப் பொருளாம் : ஆகலான் இவ்விரு பகுதியுமன்றி ஒருவாற்றான் அறி



யப்படாமையும் ஒருவாற்றானறியப்படுதலுமாகிய இரண்டு வகை யானுஞ் சிவசத்தாமெனக் கூறுவர் மெய்யுணர்வினிலை பெற்றுயர்ந் தோர்.

உணருருவெனி னசத்தென மாறுக. எனினென்பது முன்ன ருஞ் சென்றியைந்தது. ஒருவாற்றான் அறியப்படாமை - பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமை. ஒருவாற்றானறியப்படுதல் - சிவ ஞானமொன்றானே அறியப்படுதல். பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமையிற் சிவமாதலும், பதிஞானத்தாலறியப்படுதலிற் சத்தாதலும் பெறப்படுமென்பார் 'இரண்டுவகையிற் சிவசத்தா மென விசைக்கு' மென்றார். சிவசத்தென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு. சடமாகிய சத்தினீக்குதற்குச் சிவசத்தென்றார். சிவசத்தென்பது சித்துச்சத்தென்னும் பொருட்டு. எழுவாய் மேலைச் சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது. இருதிறனுமன்றி இரண்டுவகையானுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையனாய் நிற்றல் முதல்வனுக் கிலக்கணமென இலக்கணமும் இதனுட் போந்தவாறுணர்க.

முதல்வனுக்குப் பொதுவியல்பு மேற் புனருற்பவமுணர்த்து முகத்தாற்கூறிப் போந்தமையின் இது சொரூபலக்கணமெனப்படுஞ் சிறப்பிலக்கணமெனக் கொள்க. அற்றாகலினன்றே இதனை இலக்கண ஒத்துண் முதற்கட்கூறாது உண்மையைச் சாரவைத்து இறுதிக்கட் கூறியதூஉமென்க. இன்னும் முதல்வனுக்குளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுளடங்கும். அஃதறிந்தடக்கிக் கொள்க. * " தன்னாலே தனையறிந்தால் தன்னையுந் தானே தானே காணும் " எ-ம். †"உன்னரிய திருவருளை யொழியமல முளதென் றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே" எ-ம் ‡ " மாயை மாமாயை மாயா வருமிரு வினையின் வாய்மை—யாயவா றுயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும் " எ-ம். ஓதியவாற்றால் ஏனைப் பசுபாசங்களுஞ் சிறப்பியல்புபற்றி யுணர்தல் சிவஞானத்தானன்றி

---

* சிவப்பிரகாசம், உண்மை - ௨௨. தன்னறிவுதன் [illegible]
† ஷை, பொது - ௨௪. அன்னியமானவை [illegible]
‡ ஷை, உண்மை - ௨௦. மாயைமாமாயை [illegible]

அமையாதாயினும் *"தீபமெனத் தெரிந்தாங்—கொருவியான் மாவி னுண்மையுணர்ந்தவர் தமையுணர்ந்தோர்—தருமிது பசுஞானம்" எ-ம் †"இவைகீழ் நாடலாலே—காதலின ஞன்பிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானம்" எ-ம். பொதுவியல்புபற்றி ஓதுதலானும் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலேன் என்றறியும் பாசவுணர்விற்கு அவற்றது பொதுவியல்பு விடயமாதல் கண்கூடாகப் பெறப்படுதலா னும், அவை ஒருவாற்றானுணருருவாதலு முடைமையிற் சிவசத் தாவான் செல்லாமை யறிக. சற்காரிய வாதங் கூறுஞ் சைவசித்தாந் தத்தில் அசத்தென்பது சத்துக்கு மறுதலையன்மையான் அப்பசு பாசங்கள் அங்ஙன மறியப்படும் பொதுவியல்புபற்றி அசத்தெனப் படுமாயினுஞ் சிறப்பியல்புபற்றி அசத்தாதல் செல்லாமையிற் சிறப் பியல்பு நோக்கும்வழி அவை சத்தாதற் கிழுக்கின்மையுமறிக. இங் ஙனஞ் செவ்வனே இறுக்க அறியாதார் அபாவத்தினியல்பாவது பாவத்திற்கு மறுதலைப்பொருள் போலுமென நையாயிகர் முதலி யோர் மதம்பற்றிமயங்கி எல்லாப் பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந் தத்தோடு முரணுமைப்பொருட்டு ஈண்டுச் சத்து அசத்தெனப்பட் டன சித்து அசித்தென்னும் பொருளவாமெனவும், சுத்தம் அசுத்த மென்னும் பொருளவாமெனவும், உரைத்திடர்ப்படுவர். காரியப்பிர பஞ்சம் ஏனைப்பசுபாசங்கள்போலன்றி இருவகை இயல்பானுங் காட் சிப்புலனாய் இத்துணைப்பொழுது நிற்குமென நம்மனோரால் அறியவா ராது நிலைபெறுவதுபோலத் தோன்றிவிரையக் கெட்டு மறைந்து போதற் சிறப்புடைமைபற்றி அதுவே ஈண்டு உணருருவசத்தென் றெடுத்துக் கொள்ளப்பட்டது. அசத்தெனவே அசித்தென்பதுந் தானே போதரும்.

இதனுள் உணருருவசத்தெனி னுணராதின்மையினென்றது ஓரதிகரணம்; இருதிறனல்லது சிவசத்தாமென இரண்டு வகையி னிசைக்குமன்னுலகே யென்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதி கரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

* சிவஞானசித்தியார், நான்காஞ் சூத்திரம் - ௨. கருவியா மனமும்.

† ஷை, ஒன்பதாஞ்சூத்திரம் - ௨. வேதசாத்திர.



## முதலதிகரணம்

ஈண்டு அறிவினலறியப்பட்ட சுட்டு அசத்தென்றது.

மே—மேலைச்சூத்திரத்தின் அளந்தறிந்தறியா வென்றதனை உடம்படாது பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளான் அளந் தறிபொருளேயாமென நையாயிகர் முதலியோர் கூறுங்கடாவையும், எல்லாப்பொருளுஞ் சத்தாகலின் அளந்தறிபொருளுஞ் சத்தேயா மெனச் சாங்கியர் கூறுங்கடாவையு மாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

சுட்டறிவினல் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல்லாம் அசத்து.

சிவஞானத்தாலறியப்படுதலை நீக்குதற்கு அறிவினலென விசேடித்தார். ஈண்டு அறிவென்றது ஒன்றை முந்தி அதுவதுவாகச் சுட்டிக்காணும் அளவை யறிவினையென்பது *"அறிவின லறிந்த யாவு மசத்தாத லறிதி" என்ற புடைநூலாசிரியர் மீள அங்ஙனந் தெரித்தோதியவாறுபற்றி யுணர்ந்துகொள்க.

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்ற லான்.

ஏ—உள்ளதென்னு முணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சத்தை இல்லையென்னுமுணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பிக்கும் இல்பொருளோடொப்ப அசத்தென் றல் அமையுமாறியாங்ஙனமெனவும், சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுதன்மாத்திரையான் அசத்தென்றல் சற்காரியவாதத்திற் கிழுக்காம்போலுமெனவும், முறையே அவ்விருவர்மதம்பற்றிக் கூறு வாரைநோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

அச்சுட்டுப்பொருள்கடாம் இராசதகுண மிகுதிப்பாட்டான் உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பித்து நின்று தானே தாமதகுணமிகுதிப்பாட்டான் இல்லையென்னு முணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பித்து நிற்றலான் ஈண்டறிவினலறியப்பட்டசுட்டு அசத்தென மேற்கொண்டது.

* சிவப்பிரகாசம், உண்மை. ௫.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசமென்பன உபலத்தி அநுபலத்தியென்னும் பொருளவாய் அவை நிகழ்தற்கிடனாகிய பொருண்மேனின்றன. இது நையாயிகரை நோக்கி மேற்கோளைச் சாதித்தவாறு. இனி இதனை இரட்டுறமொழிந்துகொண்டு அவைதாங் காரியவவத்தையிற்றூலமாய் விளங்கிநின்றே காட்சிப்புலனாய்ச் சடிதியின் மறைந்து சூக்குமமாய்க் காரணவவத்தையின்விளங்காது நிற்கும் இவ்வேற்றுமையுடைமையான் அங்ஙனம் புலனாகாத காரணப்பொருள்களை நோக்கிக் காரியப்பிரபஞ்சம் அசத்தாதல் சாலுமாகலின் ஈண்டறிவினா லறியப்பட்ட சுட்டு அசத்தென மேற்கொண்டதென்றவாறு எனவும் உரைத்துக்கொள்க.

அசத்தறியாய் கேள்நீ அறிவறிந்த எல்லாம்
அசத்தாகும் மெய்கண்டா னாயின்—

உ—ஒருசாரன அங்ஙனமாயினும் உபலத்திப்பட்டன வெல்லாம் அவ்வாறு அசத்தாமென்றற்குப் பிரமாணமென்னையென்னு நையாயிகரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

அசத்து அறியாய் நீ கேள் - அசத்தினியல்பை அறியாத மடவோனே யாமிறுக்கு மிறையை நீ மனம்பற்றிக் கேட்பாயாக,—மெய் கண்டான் ஆயின் அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும் - சத்தினியல்பை யறிந்தோன் ஆராய்ந்தானாயின் அறிவினாலறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாம். அசத்தினியல்பை யறிந்தாயாயின் இவ்வாறு பிணங்குவாயல்லையென்பார் அசத்தறியாயென்றும், *"எந்தை தாட் பால் வணங்கித் தலைநின்று கேட்க" என்பார் கேணீயென்றும், உபலத்திக்கு விடயமானவையெல்லாம் அநுபலத்திக்கு விடயமாதல் ஒருதலையென்பார் அறிவறிந்தவெல்லா மசத்தாகுமென்றும், சத்தினியல்புணர்ந்தார்க்கன்றி அசத்தினியல்புணரா வாராதென்பார் மெய்கண்டானென்றும், ஆய்தற்கருமை நோக்கி ஆயினென்றுங் கூறினார்.

அசத்தலாய்
நீரில் எழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின் அவை இன்றாமா றொப்பு.

* திருஞானசம்பந்தர் தேவாரம், திருப்பாசுரம். ௪. ஆட்பாலவர்.



உ—இரட்டுறமொழிந்துகொண்டு சாங்கியரை நோக்கியுரைத்த பொருளை வலியுறுத்துதனுதலிற்று.

அசத்து அலாய் - அசற்காரிய வாதி யல்லாத அறிவுடையோனே.—அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஓரின் - அங்ஙனந் தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமை யாராயின்,—நிகழ்நீரில் எழுத்து கனவும் பேய்த்தேரும் - நிகழாநின்ற நீர்மேலெழுத்துங் கனவிற்காட்சியும் பேய்த்தேருமாம்.

எனவே அப்போதுள்ளனவாய நீர்மேலெழுத்து முதலியனவற்றை அங்ஙனே சடிதியின் மறைந்துபோதற் சிறப்புப்பற்றி அசத்தென்றல் எல்லார்க்கு மொப்பமுடிந்தமையின், அவ்வியல்புடைய பிரபஞ்சத்தையும் அவைபோல் அசத்தென்றல் அமையுமென்றவாறாயிற்று.

அசற்காரியவாதியை அசத்தென்றுபசரித்தார். நீரிலெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழென்றடைகொடுத்தார்: அஃதியாண்டுஞ் சென்றியையும். நீரிலெழுத்துத் தோன்றிய பொழுதே மறைந்துபோதற்கும், கனப்பொருள் முடிவுபெறுதலின்றி இடையே மறைந்துபோதற்கும், அருஞ்சுரத்தின் முதுவேனிலின் நண்பகற் கடுமைபற்றித் தோற்றி ஞாயிற்றின் கிரணம் முகிற்படலத்தின் மறைந்தவழித் தானு மறைந்துபோவதாகிய பேய்த்தேர் ஒரு காரணங்காட்டி மறைந்து போதற்கும் உவமையாயின. இவ்வெண்பாவை "இலயித்ததன்னில்" என்பதுபோல இங்ஙனம் இருதொடராக வைத்துரைத்து மேற்கோளேதுக்களையும் இரட்டுறமொழிந்து கொண்டு இரண்டதிகரணப்பொருள் கோடல் ஆசிரியர் கருத்தென்பது வழி நூலாசிரியர் *"அசத்தாஞ் சுட்டி யுணர்பொருளான வெல்லாம்" எ-ம். †"உலகினை யசத்து மென்பர்" எ-ம். வேறு கூறியவாற்றானு முணர்க. இஃதறியாது இவ்வெண்பாவை ஒருதொடராக வைத்துரைப்பார்க்கு அசத்தறியாய், அசத்தலாய் என்றதனால் ஒரு பயன்படாமையும், ஆயின் ஓரினென்று இருகாற்கூறுதலும், அசத்தாகும் இன்றாமென்று இருகாற்கூறுதலுங் கூறியது கூறலென்னும் வழுவாதலுமறிக. இனி ஒருவாற்றானு முணரப்படாதபொருள்

* சிவஞானசித்தியார், ஆறாஞ்சூத்திரம் - உ. ஆவதாயழிவ.
† ௸, ௸ - ௩. மண்டனில்.

சூனியமென்பது எல்லாச்சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தமையின் ஆண்டதிகாணத்திற்குரிய ஐயப்பாடுமுதலியன நிகழாமையான் அதனை வேறெடுத்துரைத்து மேற்கொள்ள வேண்டாவாயினும், மந்தவுணர்வுடையார்க்கு அதன்கண் ஐயநிகழாமைப்பொருட்டு வழிநூலாசிரியர் *“உணராதபொருள் சத்தென்னி லொருபய னில்லை போலும்” என விடுத்தொழிந்தாரென்றுணர்க.

## இரண்டாமதிகரணம்

இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற வதுவே சத்தாயுள்ள சிவமென்றுணரற்பாற்று.

மே—மேல் உணர்பொருளியல்பும் உணராதபொருளியல்புங் கூறுமுகத்தான் அசத்தினியல்பை வரைசெய்துணர்த்தியவழி இரண்டும் இவ்வாறாகலான் இவற்றின் வேறாய முதல்வனதியல்பாவது மாயாவாதி கூறும் அநிருவசனம் போலுமென்னுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடலுதலிற்று.

வாக்கெனப்படு நாதமுடிவான பாசஞானத்தை வாக்கென்றும், அவற்றின் வேறாய பசுஞானத்தை மனமென்றும் உபசாரவழக்காற் கூறினார். வாக்குமனாதீத கோசரமாய் நின்றவென்றது. அவ்விரண்டின் விருத்திகளைக் கடந்து அதீதமாயும், ஒற்றுமைப்பட்டுநின்றுணரும் அநுபவஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்றவென்றவாறு. அவ்வாறு நின்றபொருள் இதுவென அளவைகளான் அறியவாராமைபற்றி அதுவேயென மகாவாக்கியத்திற் கூறியதனை அநுவதித்துச் சத்தாகிய சிவமாதலைச் செவியறிவுறுத்தார். வாக்குமனாதீதப் பொருளாகலின் உணருருவாந்தன்மையும், கோசரப்பொருளாகலின் உணராதாந்தன்மையும் இல்லையென்பது பெறப்படுதலின் இவ்விரண்டு வகையு மின்றி யென்றார்.

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும்.

---

* சிவஞான சித்தியார், ஆறாஞ் சூத்திரம் - ௪. உணராத.



ஏ—இவ்விரண்டு வகையுமில்லாத பொருள் அநிருவசனமாய் நிற்பதென்னாது வாக்குமனாதீதகோசரமாய் நிற்பதென்றற்குப் பிரமாணமென்னை யென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

வாக்குமனங்களா லோதியுணரப்படுவதாய நிருவசனப்பொருட்கு முன்னர்க் கூறப்படுஞ்சாதனங்களினின்று அறியற்பாலதாக வேண்டாமையானும் ஒருவாற்றானும் அறியப்படாத அநிருவசனப்பொருட்குச் சாதனத்தினின்றும் அறியப்படுமாறின்மையானும் இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனாதீதகோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென் றுணரற்பாற்றெனமேற்கொண்டது. உணர்தற்பாற்றென்றார் உணர்தலருமை நோக்கி. பிரகாசம் அப்பிரகாசமென்பன உபசாரவழக்கு.

> எண்ணிய சத்தன் றசத்தன்றாம் என்றால்என்
> கண்ணி உளதென்றன் மெய்கண்டான்—எண்ணி
> அறிய இரண்டாம் அசத்தாதல் சத்தாம்
> அறிவறியா மெய்சிவன் தாளாம்.

உ—பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அவிச்சைவயத்தான் ஞாதாவெனவும் ஞேயமெனவும் பகுக்கப்பட்டு முன்னர்க் கூறப்படுஞ் சாதநங்களினின்றறியவும் படும். அவிச்சை நீங்கியவழி அப்பகுப்பின்மையாற் சத்தென்றாதல் அசத்தென்றாதல் ஒருவாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவலஞான மாத்திரையேயாய் நிற்பதொன்றாகலான் அது கோசரமாமென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

எண்ணிய சத்து அன்று அசத்து அன்று ஆம் என்றால் உளது என்றல் என்கண்ணி - பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்துமன்று அசத்துமன்றெனின் அங்ஙனமொரு பொருளுண்டென்றல் யாது பிரமாணங் கருதியோ அதனைக் கூறுவாயாக. பிரமாணமுண்டெனில் அதற்கு அது பிரமேயமெனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென்றஞ்சிப் பிரமாணமில்லை யென்பையாயின்,—மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம் - சத்தினியல்பையுணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் காட்சி முதலிய பிரமாணங்கட்கு விடயமாவதூஉம் ஒருவாற்றானும் பிராமாணமல்லாத

சூனியமுமாகிய இரண்டும் மேற்கூறியவாற்ருன் அசத்தேயாம்.— ஆதல் சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம் - ஆதலாற் சாங்தோக்கிய முதலியவற்றுட் சத்தென்றேதப்படுஞ் சுட்டறிவிஞல் அறியப்படாத மெய்ப்பொருள் சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அன்னியமின்றி நின்றுணரும் அநுபவமாத்திரையிற் கோசரிப்பதென்றேதப்படுஞ் சிவனருளாவதன்றி நீ கூறுஞ் சூனியமன்று.

சிவன்றளெனச் சிவசத்தியின்மேல் வைத்து உயர்த்துக் கூறியது உபசார வழக்கு. *“இறைவனர் கமலபாதம்” என்பதுமது.

இதனுற் போந்த பொருள் சத்துமன்றி அசத்துமன்றி ஒரு பொருளுண்டெனின் அதற்குப் பிரமாணமென்னை? பிரமாணுதீதமாகிய சூனியமெனிற் சூனியமும் அழிபொருளுமாகிய இரண்டும் அசத்தேயென்பது மேற்காட்டினமையாற் பிரமப்பொருள் அசத்தெனப்பட்டுச் சத்தென்னுஞ் சுருதிகளோடு முரணுமாகலின் அவற்றுட் சத்தென்றேதப்படும் பரப்பிரமப் பொருளாவது உண்மை ஞானத்திற் கோசரிப்பதென யாங்கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரமென்றதனை வலியுறுத்தியவாறுமென்க. எண்ணியறிய இரண்டாமசத்தென்பதற்குப் பிறரெல்லாம் வருகின்ற வெண்பாவிற்கூறும் பொருள்படக் கூறியது கூறலாதன்மேலும் ஒரியைபின்றியுரைப்ப.

**உ**ணர்ப அசத்தாதல் ஒன்றுணரா தொன்றை
உணருநீ தான்உணரா யாயின்—உணரும்உனின்
தானிரண்டாம் மெய்கண்டான் தன்ஞல் உணர்தலாற்
தானிரண்டாய்க் காணுன் தமி.

உ—பிரகாசித்த பொருளையும் வேருேராற்ருன் அறிதுமென வேட்கை சென்றுழி அவ்வாற்ருற் புதுவதாய்ப் பிரகாசிக்க வேண்டுதலிற் பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதில்லையென்றல் யாண்டுஞ் செல்லாமையின் வாக்கு மனுதீதமென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுலிற்று.

* சிவஞானசித்தியார், [illegible]னுல்.

ஆரோரா என்பவர் உடனே சோர்ந்து விழுந்து இறந்தார். இதைக் கண்ட தூர்க்க பிரசாதரின் 22 வயதுடைய மனைவியாரும் உடனே சோர்ந்து விழுந்து இறந்தார். சில நிமிஷங் கழித்து மாதோ பிரசாதரும் இறந்தார். ஆ! என்னே! பிதுர் பக்தியின் வன்மை! என்னே! பதி பக்தியின் மேன்மை! சூரபன்மன் இறந்தானெனக் கேட்டதும் கற்பிற்சிறந்த அவன் மனைவி உயிர் நீத்தாளென்று கந்தபுராணம் கூறுவது நம்பத்தகாத கட்டுக் கதையென்று கூறித்திரியும் உணர்வற்ற அறிவிலிகள் உடன் உயிர் துறக்கும் காதலின் வன்மை நமது நாட்டில் உண்டு என்று இனியேனும் உணர்வார்களாக.

---

## கபாலீச்சரத்தில் சிவபுராண பாராயணம்

இரண்டு ஆண்டுகட்கு முன் சங்கராசாரிய சுவாமிகள் சென்னைக்கு வந்ததன் பயனாகத் திருமயிலைக் கபாலீச்சரத்தில் ஒவ்வொரு பிரதோஷத்திலும் பிரதோஷ நாயனார் புறப்படுங்கால் பின்புறத்தில் ஆங்கிலங் கற்று உத்தியோகம் செய்யும் அந்தணர்கள் வைதீகக் கோலங்கொண்டு உருத்திர பாராயணம் செய்யும் புதிய நிகழ்ச்சி நிலைபெற்றது. இம்முறையைப் பின்பற்றித் தமிழ்மக்கள் திருவாசகத்தில் சிவபுராணத்தகவலை பாராயணம் செய்யும்படி கட்டளையிடுமாறு ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளைச் சமாஜக் காரியதரிசி வேண்டினர். சுவாமிகளும் கட்டளை யிட்டருளினார்கள். இக்கட்டளையைச் சிர மேற்கொண்டு நல்லன்பர் பலர் ஒன்றுகூடி இன்னிசைக் கருவி முதலிய இன்னல்களின்றி சுத்தாங்கமாக ஒருவர் முன் மொழிய ஏனையோர் உடன் மொழியும் உயரிய முறையில் சிவபுராணத்தகவலைச் சென்ற இரண்டு பிரதோஷங்களில் பாராயணஞ் செய்தார்கள். கூச்சம், கௌரவக்குறைவு என்ற உணர்ச்சி முதலிய பல காரணங்களால் இன்னம் பலர் இப்பாராயணத்தில் கலந்துகொள்ளவில்லையென்று வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். இனியேனும் மற்றொரு வகுப்பினர் செய்துவரும் முன்மாதிரியை உளத்திற் கொண்டு தமிழ்மக்கள் ஒன்றுவார்களாக. தமிழ்நாட்டில் ஏனைய சிவாலயங்களிலும் இப்பழக்கம் தொடங்கப்பட்டு நிலவுவதாக இறைவன் இன்னருள் துணைநிற்க.

---

## சைவத் தேர்வுகள்

சமாஜம் நடத்தப்போகிற சைவத் தேர்வுகள் சென்ற இதழில் குறித்தபடி 1934௵ நவம்பர்௴ 18௳ ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னையிலும் வேறு குறித்த இடங்களிலும் நடைபெறும். தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கட்கு 1-11-1934-ல் தேர்வு நிலைய நுழைவுச்சீட்டுகள் (Hall Tickets) தபாலில் அனுப்பப்பட்டன. ஒருவேளை எவருக்கேனும் இதுகாறும் சீட்டு சேரவில்லையாயின் உடனே காரியதரிசிக்கு எழுத வேண்டும். தேர்வின் முடிபு அடுத்த இதழில் வெளிவரும்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 7. No. 11.

உ

## கருங்குழியில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகட்கு வரவேற்பு

1-11-1934, வியாழக்கிழமை காலை, 10 மணிக்கு, மதுராந்தகத்தைச் சேர்ந்த, கருங்குழி கிராமத்தில், திருக்கைலாய பரம்பரை, திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர், ஸ்ரீமத் ஞானியார் மடாலயத் தலைவர், ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் விருதுகளுடன், எதிர்கொண்டழைக்கப் பெற்று, அவ்வூர், ஞானகிரீஸ்வரர் ஆலயத்தில் தரிசனம் செய்து அங்கிருந்து ஊர்வலமாக, அழைக்கப்பட்டு, பற்பலவீடுகளில் பூர்ண கும்பம், மங்களாரத்தி முதலியஉபசாரங்கள் செய்யப்பெற்று, அன்று மாலை 6 மணிக்குமேல், "முருகன் பெருமை" என்னும் விஷயத்தைப்பற்றி மகத்தான சொற்பெருக்கும் செய்தார்கள். அவ்வமயம் ஆயிரக்கணக்கான அன்பர்கள் பல ஊர்களிலிருந்து வந்து கேட்டு இன்புற்றார்கள்.

---


உ

வெளிவந்து விட்டது ! வெளிவந்து விட்டது !!

## தொல்காப்பியம் பொருளதிகாரம்

### முதற்பாகம் (நச்சினார்க்கினியம்)

அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய ஐந்தும் அடங்கிய இப்பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிப் பதிப்பாசிரியர் திரு. S. வையாபுரிப்பிள்ளை B. A; B. L; அவர்களால் ஓலைப்பிரதியைக்கொண்டு செப்பஞ் செய்யப்பெற்று மன்னார்குடி இலக்கண வித்வான் திரு. ம. நா. சோமசுந்தரம்பிள்ளையவர்களது அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களையுடையது; முக்கியமான பகுதிகள் தடித்த எழுத்தில் காட்டப்பட்டுள்ளன : உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ கட்டடஞ் செய்யப்பெற்றது. விலை ரூபா 4. ரிஜிஸ்தர் தபாற்செலவு அணா 10.

வேண்டிய அன்பர்கள் நமது சமாஜத்திற்காவது அல்லது சாது அச்சுக்கூடத்திற்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.


---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.